In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்கு புண்ணியத் தல யாத்திரை புராணக் கதைகளின் மகிமை

பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி

Char Dham Yatra Tamil Edition

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்கு புண்ணியத் தல யாத்திரை புராணக் கதைகளின் மகிமை

பத்ரிநாத், கேதார்நாத்,
கங்கோத்ரி, யமுனோத்ரி

விலை : ரூ. : 40-00

வெளியிட்டோர்:
ரண்தீர் பதிப்பகம்
ஹரித்துவார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியிட்டோர் ரண்தீர் பதிப்பகம்
ரெயில்வே ரோடு
ஆர்த்தி ஹோட்டல் பின்புறம்
ஹரித்துவார் - 249 401
தொலைபேசி: 01334-226297

விற்பனை நிலையம் ரண்தீர் புக் ஸ்டோர்
ரெயில்வே ரோட்
ஹரித்துவார்
தொலைபேசி: 01334-228510

இறைவனிடம் தம்மை அர்ப்பணித்து
ஆன்மீகத்திலேயே மூழ்கிவிடும் ஆர்வத்துடன்
வரும் சாதுக்கள், துறவிகள்

தம் பாவங்களிலிருந்தெல்லாம் முக்தி
பெறுவதற்காக ஆன்மீகப் பாதையில்
புண்ணியத் தலங்களின் யாத்திரை
மேற்கொண்டிருக்கிற பக்தர்கள்

இயற்கை அழகை மட்டுமே ஆர்வம் கொண்டு
இமாலய மலைத்தொடர்களின் மடியில் பயணம்
செய்ய வரும் சுற்றுலாப் பயணிகள்

என அனைவருக்கும் உதவும் வண்ணம்
எளிய மொழியில் எழுதப்பட்ட
உத்தராக்கண்ட் யாத்திரைக் கையேடு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளடக்கம்

முகவுரை 5

1. உத்தராக்கண்டத்தின் புராண மகிமை 9

2. புண்ணியத் தல விவரங்கள் 14
யாத்திரைக்கு உகந்த காலம் 14
சாலைவழி 15
பயணத் தலங்களின் தொலைவு விவரம் 16
உத்தராக்கண்ட் மலைப்பகுதிகள் 17
போக்குவரத்து வசதி 18
சாலை வசதி 19
பயணத்தின்போது தேவையானவை 20
அம்பாசிடர் டாக்சி, குதிரை, தண்டி கட்டணம் 21
தங்கும் வசதி 21
கடைகள் 22
ஆடைகள், உணவு 23
கூலிகள், நடைப்பயணத்தில் கவனம் 24
காலநிலை 25
ஹரித்துவார்–பத்ரிநாத் 26

3. ஹரித்துவார் 27
விழாக்காலம் 28
பார்க்க வேண்டிய இடங்கள் 29

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. ரிஷிகேசம்
பார்க்க வேண்டிய இடங்கள்
உத்தராக்கண்டத்தின் சிகரங்கள்
சில முக்கியத் தலங்களின் உயரம்

5. யமுனோத்ரி
ஹரித்துவார்–யமுனோத்ரி பாதை
பார்க்க வேண்டிய இடங்கள்

6. கங்கோத்ரி
கங்கைத்தாய் கோயில்
யமுனோத்ரி–கங்கோத்ரி பாதை
பார்க்க வேண்டிய இடங்கள்
கங்கோத்ரி–கேதார்நாத் பாதை

7. கேதார்நாத்
சிறப்புக்குரிய சிவத்தலம்
பஞ்சகேதார்
ரிஷிகேசம்–கேதார்நாத் பாதை
கேதார்நாத் பூஜை விவரங்கள்
பார்க்க வேண்டிய இடங்கள்
கர்வால் மலைகளின் பெயர்கள்

8. பத்ரிநாத்
பத்ரிநாதர் ஆலயம்
பஞ்சபத்ரி
பார்க்க வேண்டிய இடங்கள்
ஹரித்துவார்–பத்ரிநாத் பாதை

9. மலர்ப்பள்ளத்தாக்கு

10. ஹேமகுண்ட் சாஹிப்

தங்கும் வசதிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகவுரை

"ஜெய் கேதார்நாத்!"

எதிரே வருகிற துறவியைப் பார்த்து ஒருவர் கூறுகிறார்.

"ஜெய் பத்ரிவிஷால்!"

பத்ரிநாத் மற்றும் கேதார்நாத் யாத்திரையில் முகமன் கூறிக்கொள்ளும் விதம் இதுதான். கேதார் நாத்தை நோக்கி யாத்திரை செய்பவர்கள் 'ஜெய் கேதார்நாத்' என்று கூறுகிறார்கள். அங்கிருந்து திரும்பி பத்ரிநாத்துக்குப் போகிறவர்கள் 'ஜெய் பத்ரிவிஷால்' என்று கோஷம் எழுப்புகிறார்கள். இதிலிருந்து யாத்திரிகர்கள் போகுமிடம் தெரிய வருகிறது; வணக்கமும் தெரிவிக்கப்படுகிறது.

காலம் காலமாக மனதில் அடங்கிக்கிடந்த ஒரு அபிலாஷையைப் பூர்த்தி செய்யும் நேரம் வந்து விட்டது. இதை எண்ணி நீங்கள் பூரணமான மகிழ்ச்சி அடையலாம். உத்தராக்கண்ட் யாத்திரையின் வழியெங்கும் நிகரற்ற இயற்கை அழகு காணக் கிடைக்கிறது. இந்த அழகுக்கு உலகெங்கும் ஈடு இணை இல்லை. வெளிப்படுத்த சொற்களும் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பத்ரிநாத் செல்ல நடைப்பயணம் மட்டுமே என்ற காலம் முடிந்து விட்டது. இப்போது வாகன வசதிகள் இருக்கின்றன. இருந்தாலும் கடினமான பாதையில் நடைப் பயணம் செய்வது மிகவும் இன்பம் தருவது. இந்தப் பாதையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரிசை வரிசையாகப் போய்க் கொண்டே இருக்கிறார்கள். பஞ்சபாண்டவர்கள் இதே பாதை களில் சென்றுதான் சுவர்க்கத்தை அடைந்தார்கள். ஆதிசங்கரருடைய காலடிச் சுவடுகள் இந்தப் பாதையில் பதிந்துள்ளன. அத்வைத வேதாந்தத்தின் வெற்றிக் கொடியை உலகெங்கும் நாட்டியவர் ஆதிசங்கரர். சிவபெருமானின் அவதாரமாகவே கருதப்படுபவர். இந்தப் பாதையில் உள்ள துகள்களும் கற்களும் பாறைகளும் மரஞ்செடிகொடிகளும் எல்லாருடைய இன்பதுன்பங்களின் உரையாடல் களையும், ஆனந்தத்தையும், களைப்பின் நெடு மூச்சுகளையும் காலம் காலமாகக் கேட்டு வருகின்றன. இன்று நம் அனைவருக்கும் பத்ரிநாத் கோயில் வரையிலும் பேருந்தில் அல்லது காரில் செல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அது மட்டுமல்ல, கங்கோத்ரி வரையிலும்கூட சாலை போடப்பட்டு விட்டது.

ஒருபக்கம் அலக்நந்தா போன்ற நீல வண்ண ஆறுகள் சலசலவென்று ஓடி, இசைத்துக் கொண் டிருக்கின்றன. மற்றொரு பக்கம் மலைகளுக்கு எல்லாம் அரசனான இமாலயத்தின் உயர்ந்த பனிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிகரங்கள் விண்ணை முட்டிக்கொண்டு நிற்கின்றன. வனத்தின் ஒப்பற்ற அழகு, பறவைகளின் கானம், மலர்களின் நறுமணம், ஆகாயத்தில் தெளிந்த நீலவானம் — இவையெல்லாம் சேர்ந்து நாம் சுவர்க்க லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதாக எண்ண வைக்கின்றன. கண்கள் இந்தக் கவின்மிகு அழகில் சொக்கிப் போய் இன்னும் தாகத்துடன் இந்த அழகைப் பருக நாற்புறமும் சுழன்று கொண்டே இருக்கின்றன. ஏனென்றால், இந்த மாதிரியான ஒரு விருந்து அடிக்கடி கிடைக்காதது. இமாலயம் இந்த அளவுக்கு ரம்மியமானது என்று நீங்கள் கனவிலும் நினைத்திருக்க மாட்டீர்கள். அவ்வளவு அற்புதம்!

உத்தரகாண்டம் நமது பண்டைய நாகரிகத்தின் தொட்டில். மகாபாரதத்தின் ஊடும் பாவும் இங்கே தான் நெய்யப்பெற்றது. மகாபாரதத்தின் நாயகர்கள் வீரம், ஆவேசம், அன்பு, பகை, தெய்வீகம் எல்லா வற்றையும் நமக்குக் காட்டியிருக்கிறார்கள். இங்குதான் வேதகால ரிஷிகள் வேததர்மத்தை நிறுவினர்.

பண்டைக்காலம் தொட்டே நடந்து வரும் யாத்திரிகர்களின் மரபிலே வருகிற பக்தர்கள், காந்தத்தால் இழுக்கப்படும் இரும்பினைப் போல ஈர்க்கப்பட்டு வந்து கொண்டே இருக்கிறார்கள். வழியில் எங்காவது தங்க வேண்டும் போல இருந்தால், எந்தக் கடைக்காரரும் தமது மாடியில் இலவசமாக தங்க வைப்பார். ஆனால் நீங்கள் அந்தக் கடை யிலிருந்து உணவுக்குத் தேவையான மாவு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணெய், நெய், பருப்பு போன்ற பொருட்களை வாங்க வேண்டும். இவ்வாறு தங்கும் இடங்களுக்கு 'சட்டி' (chatti) என்று பெயர். பெரிய முற்றம் போல இருக்கும்; அதில் நிறைய பாய்கள் விரித்திருக்கும். நீங்கள் விரும்பிய இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தங்கிக் கொள்ளலாம். பக்கத்திலேயே உங்களைப் போன்ற மற்ற யாத்திரிகர்களும் தங்குவார்கள். கோயில்களைப் போலவே 'சட்டி'களின் கதவுகளும் எல்லாருக்கும் எப்போதும் திறந்திருக்கும்.

"ஜெய் கேதார்நாத்"
"ஜெய் பத்ரிவிஷால்"

என்ற கோஷம் எழுப்பியதுமே யாத்திரிகர்களுக் கிடையே ஒரு பரஸ்பர உறவு உருவாகி விடுகிறது. இந்த முகமன், இந்த ஜெயகோஷம் கடினமான மார்க்கத்தை வெற்றி கொள்ளும் உறுதியும் ஆதரவும் ஆகும்.

ரண்தீர் சிங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1

உத்தராக்கண்டத்தின் புராணமகிமை

"இதோ பாருங்கள்... திரௌபதி நிலத்தில் விழுந்து விட்டாள்"

யோகத்தில் மனதை நிறுத்தி ஐந்து பாண்டவர் களும் மகாபர்வதமான இமாலயத்தில் ஏறிக்கொண்டு இருந்தார்கள். அப்போது அவர்களுள் திரௌபதியின் மனம் யோகத்திலிருந்து பிறழ்ந்து விட்டது. கால்கள் தள்ளாடி அவள் நிலத்தில் விழுந்தாள். அவள் விழுவதைக் கண்ட மகாபலசாலியான பீமன் முன்னால் சென்று கொண்டிருந்த அண்ணன் தர்ம புத்திரரிடம் கேட்டான் — "தவத்தில் பெரியோரே, அரசகுமாரி திரௌபதி ஒருபொழுதும் எந்தப் பாவமும் செய்யவில்லையே... அவள் கீழே விழுந்ததற்குக் காரணமென்ன?"

பீமனுடைய கேள்வியைக் கேட்ட தர்மபுத்திரர் பின்னால் திரும்பாமல் நடந்து கொண்டே பதில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொன்னார்—"அவளுடைய மனதில் அர்ஜுனனிடம் மட்டும் மிகுதியான அன்பு இருந்தது." சற்று நேரத்திற்குப் பிறகு சகதேவனும் பூமியில் விழுந்தான். அவன் விழுந்ததைத் பார்த்து பீமன் தர்மரிடம் கேட்டான் — "அண்ணா, இந்த மாத்ரிபுத்திரனான சகதேவனுடைய மனதில் அகந்தை என்பது துளியும் இருந்ததில்லை. இவன் எந்தக் காரணத்தால் விழுந்தான்?" தர்மர் மறுமொழி அளித்தார் — "தன்னைப் போன்ற புத்திமான் வேறு யாரும் கிடையாது என்ற அகந்தையினால் அவன் விழுந்தான்." தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தார் தர்மர்.

சகதேவனைத் தவிர மற்ற சகோதரர்களுடனும் ஒரு நாயுடனும் தர்மர் முன்னேறிக் கொண்டிருந்தார். அப்போது சகதேவனின் துயரத்தினால் வியாகூலமடைந்த நகுலனும் விழுந்தான். பீமன் மீண்டும் தர்மரிடம் கேட்டான் — "அண்ணா, அறத்திலிருந்து சற்றும் வழுவாத நம்முடைய பிரியமான நகுலன் ஏன் விழுந்தான்?" தர்மர் நகுலனைப் பற்றிச் சொன்னார் — "தன்னைப் போன்ற அழகன் வேறு யாருமில்லை என்று அவன் மனதில் இருந்த அகந்தைதான் காரணம். வா தம்பி, யார் என்ன வினை செய்தார்களோ, அதன் பயனை நிச்சயமாக அனுபவிப்பார்கள்." மேலும் சிறிது தூரம் போனதும் வீரத்தில் சிறந்த அர்ஜுன்ன் பாதையில் விழுந்தவுடன் பீமன் மீண்டும் தர்மரிடம் கேட்டான் —

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“அரசே, அர்ஜுனன் விளையாட்டுக்காகக்கூட பொய் பேசியதாக எனக்குத் தெரியாதே. எந்த வினையின் காரணமாக அவன் விழுந்து விட்டான்?”

“அர்ஜுனனுக்கு தன் வீரம் பற்றிய அகந்தை இருந்தது” என்று சொல்லியவாறு தர்மர் முன்னே போய்க் கொண்டிருந்தார். அப்போது பீமனும் கீழே விழுந்தான். விழுந்ததும் அவன் தர்மபுத்திரரை அழைத்துக் கேட்டான் — “சற்று என்னைப் பாருங்கள். நான் இங்கே விழுந்து விட்டேன். என் வீழ்ச்சிக்கு என்ன காரணம் என்று உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்.” தர்மர் சொன்னார் — “தம்பி... உனக்கு உணவில் மிக விருப்பம். மேலும், மற்றவர்களை நீ துச்சமாக நினைத்து தற்பெருமை பேசிக் கொண்டிருப்பாய். அதனால்தான் நீ விழ வேண்டி வந்தது-”

இவ்வாறு வரிசையாக எல்லா சகோதரர்களும் வீழ்ந்த பிறகு தர்மர் தனியாக, மனித சஞ்சாரமற்ற, வேறு உயிர்களே செல்ல இயலாத நெடிதுயர்ந்த இமயமலையில், பின்னே திரும்பாமல் மேலே மேலே போய்க் கொண்டிருந்தார்.

பாருங்கள் தர்மபுத்திரரின் உறுதியை. தர்மரின் பொறுமைக்கும் தாங்கிக்கொள்ளும் உறுதிக்கும் ஒப்புமை இல்லை. இப்படிப்பட்ட ஒரு தர்மருக்கு நிகரான வேறொருவர் புராணங்களில் மட்டுமல்ல, இன்றும்கூட காணக் கிடைக்க மாட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புண்ணியாத்மாவான தர்மர் தனது கடைசிக் காலத்தில் அறத்தில் உறுதிப்பாடுடனும், பொறுமையுடனும் போய்க்கொண்டிருந்த அதே பாதையில் நாமும் செல்வோம். உத்தராக்கண்ட் புனித யாத்திரை மேற்கொள்கிற எவருடைய மனதிலும் இந்த ஆன்மீக உணர்ச்சி தானாக மேலிடுகிறது என்பதை சொல்ல வேண்டியதில்லை. மாடமாளிகைகள் நிறைந்த நகரங்கள், விதவிதமான ஆடம்பரப் பொருள்கள் நிறைந்த ஊர்கள், வாழ்க்கையின் ஆரவாரங்கள் நிரம்பிய, சாலைகளில் இரவைப் பகலாக்கும் மின்சார விளக்குகள், வாழ்க்கை வசதிகள் நிறைந்த சூழல்கள் — இவை எல்லாவற்றிலும் கிடைக்காத ஆனந்தம் இமயத்தின் இந்தப் பாதைகளில் எளிதாகக் கிடைக்கிறது. இதில் நடப்பதற்கு வாசகர்கள் உற்சாகத்துடன் என் பின்னே வருவார்கள் என்று நம்புகிறேன்.

இந்தப் பிரதேசத்தின் மரஞ்செடிகளும்கூட 'சிவோஹம்... சிவோஹம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிற மாதிரி தோன்றுகிறது. பாகீரதி நதியில் ஸ்நானம் செய்து கரையில் அமர்ந்து ஏகாந்தத்தில் பரமனைத் துதிக்கும் அனுபவம் இந்தப் புண்ணிய பூமியில் கிடைக்கிறது. அந்த வசதி இங்கிருந்து கீழே இறங்கி கங்கைக் கரையில் உள்ள மற்ற கோயில்களில் கிடைக்காது. சித்த சுத்தி (உள்ளத்தின் தூய்மை), பிரம்மஞானத்தின் ஆதாரம். உள்ளத்தூய்மையின் வழிகளில் மிகச்சிறந்தது, மிக மேலானது கங்கா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்நானம்தான் என்பதில் ஐயமில்லை. மிகுந்த சிரத்தையுடன் கங்கையில் ஸ்நானம் செய்தல், கங்கா நீரை அருந்துதல், கங்கையைப் பூஜித்தல், "ஹே கங்கைத் தாயே, ஹே பாகீரதி, ஹே உலகத்தாயே, ஹே ஜடாசங்கரி" என்று கூறி கங்கா தேவியைத் துதித்தல் ஆகியவற்றால் உள்ளத்தூய்மை கிடைக்கிறது. அதுதான் இந்த புனிதத்தலத்தில் கிடைக்கக்கூடிய பெரும்பேறு.

கங்கை எல்லா இடத்திலும் கங்கைதான். அழகு பொருந்திய இமயம் எங்குமே இமயம்தான். ஆனால் உத்தராக்கண்டத்தில் காணுகிற இமயத்தின் அழகும் பாகீரதி கங்கையின் அழகும் தன்னிகரற்றது. பக்தர்களின் கண்களுக்கே இந்த அழகு புனிதம் நிறைந்ததாகத் தெரிகிறது. புலன்களுக்கு அப்பாற்பட்ட இந்த அழகும் தெய்வீகத்தன்மையும், உணர்ந்து அறிய வேண்டிய ஒரு அனுபவம். பக்தர்கள் இந்த அனுபவத்தை உணரத்தான் புனித யாத்திரை மேற்கொள்கிறார்கள். உள்ளமும் உடலும் தூய்மை பெற்று திரும்புகிறார்கள். வாருங்கள் நாமும் யாத்திரை மேற்கொள்வோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2

புண்ணியத் தல விவரங்கள்

பத்ரிநாத், கேதார்நாத், யமுனோத்ரி, கங்கோத்ரி ஆகிய நான்கு புண்ணியத் தலங்களுக்கும் மேற்கொள்ளப் படும் யாத்திரை **'சாரோ தாம் யாத்திரை'** என அழைக்கப்படுகிறது. இதை **உத்தராக்கண்ட் யாத்திரை** என்றும் சொல்வது உண்டு. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் திரளாக வரும் பக்தர்களுக்காக பல்வேறு வசதிகள் உள்ளன. யாத்திரை மேற்கொள்கிற பக்தர்களுக்குத் தேவையான முக்கிய விவரங்கள் இந்தப் பகுதியில் தரப்பட்டுள்ளன.

யாத்திரைக்கு உகந்த காலம்

ஏப்ரல் 15ஆம் தேதி முதல் ஜூலை 31 வரை; மற்றும் செப்டம்பர், அக்டோபர் மாதங்கள். பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி, ரிஷிகேசம் சென்று வர இதுவே உகந்த காலமாகும். ஜூலையும் ஆகஸ்டும் மழைக்காலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாலைவழி

தில்லியிலிருந்து ஹரித்துவார் வழியாக ரிஷிகேசத்துக்கு பேருந்து வசதி சிறப்பாக உண்டு. தில்லிப் போக்குவரத்துக் கழகம், உத்தராஞ்சல் அரசுப் போக்குவரத்துக் கழகம், மற்றும் தனியார் பேருந்துகள் எந்நேரமும் இயங்குகின்றன. இந்தப் பேருந்துகள் ரிஷிகேசத்தையும் பத்ரிநாத்தையும்கூட இணைக் கின்றன. ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் சென்றடைய ஒன்றரை நாள் ஆகும். ஹரித்துவாரிலிருந்து கோட்துவாரா வரை ரயில் போக்குவரத்து வசதியும் உள்ளது.

ரிஷிகேசம், கோட்துவாராவிலிருந்து கேதார்நாத் மற்றும் பத்ரிநாத்திற்குச் செல்ல இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று — கௌரிகுண்டம் வழியாகச் செல்வது. இந்தப் பாதையில் தேவ பிரயாகை, ஸ்ரீநகர், ருத்ரபிரயாகை, தில்வாரா, அகஸ்தியமுனி குண்ட், குப்தகாசி, ராம்பூர், சோன் பிரயாகை வழியாக கௌரிகுண்டத்தை அடைய 211 கி.மீ. இங்கிருந்து கேதார்நாத் வரை 14 கி.மீ. நடைப்பயணம். இரண்டாவது, கோட்வாடாவிலிருந்து தோகட்டா, கும்கல், சம்புலி, பௌடி, ஸ்ரீநகர், ருத்ர பிரயாகை வரை 236 கி.மீ. சாலை வழியாக அடைதல். ருத்ர பிரயாகையிலிருந்து 72 கி.மீ. பேருந்தில் பயணம் செய்து கௌரிகுண்டம் செல்லுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயணத்தலங்களின் தொலைவு விவரம்

புறப்படும் இடம்	செல்லும் இடம்	தொலைவு (கி.மீ.)	கட்டணம் (சுமார்-ரூ)
ஹரித்துவார்	பத்ரிநாத்	333	120
ஹரித்துவார்	கௌரிகுண்டம்	247	100
ஹரித்துவார்	ஹனுமான்சட்டி	252	100
ஹரித்துவார்	கங்கோத்ரி	295	100
ஹரித்துவார்	கோவிந்த்காட்	307	100
ஹரித்துவார்	தேவ்லி	59	30
ஹரித்துவார்	நைனிடால்	217	90
ரிஷிகேசம்	பத்ரிநாத்	301	110
ரிஷிகேசம்	கௌரிகுண்டம்	216	90
ரிஷிகேசம்	ஹனுமான்சட்டி	220	90
ரிஷிகேசம்	கங்கோத்ரி	260	90
ரிஷிகேசம்	கோவிந்த்காட்	275	90
கோட்துவார்	பத்ரிநாத்	328	100
கோட்துவார்	கௌரிகுண்டம்	242	90
கோட்துவார்	கோவிந்த்காட்	302	110
ராம்நகர்	பத்ரிநாத்	337	125
ராம்நகர்	கௌரிகுண்டம்	317	95
ராம்நகர்	கோவிந்த்காட்	311	95
ஹனுமான்சட்டி	கங்கோத்ரி	222	85
ஹனுமான்சட்டி	கௌரிகுண்டம்	300	95
ஹனுமான்சட்டி	பத்ரிநாத்	384	120
கங்கோத்ரி	கௌரிகுண்டம்	449	150
கங்கோத்ரி	பத்ரிநாத்	344	120
கௌரிகுண்டம்	பத்ரிநாத்	233	85

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்தராக்கண்ட் மலைப்பகுதிகள் குறித்த சில விவரங்கள்

	இடம்	உயரம் (மீட்டர்)	தொலைவு (கி.மீ.)	வாகனப் பயணம் (கி.மீ.)	நடைப் பயணம் (கி.மீ.)
1.	யமுனோத்ரி	3322	265	252	13 (ஹனுமான் சட்டியிலிருந்து)
2.	கங்கோத்ரி	3140	297	297	-
3.	கேதார்நாத்	3581	262	248	14 (ஹனுமான் சட்டியிலிருந்து)
4.	பத்ரிநாத்	3122	33	333	-
5.	மலர்பள்ளத்தாக்கு	3658 - 3962	327	307	20 (கோவிந்த் காட்டிலிருந்து)
6,	ஹேமகுண்டம் லோக்பால்	4329	327	307	20 (கோவிந்த் காட்டிலிருந்து)

குறிப்பு: உலகிலேயே மிக உயரத்தில் அமைந்துள்ள குருத்வாராவும் (சீக்கியர் கோயிலும்), லட்சுமணன் கோயிலும் ஹேமகுண்டத்தில்தான் உள்ளன.

கோவிந்த் காட்டிலிருந்து கங்கோத்ரி 14 கி.மீ. தொலைவில் உள்ளது. அங்கிருந்து மலர்ப்பள்ளத்தாக்கு 6 கி.மீ. ஆகும். ஹேமகுண்டம் லோ:க்பால் 6 கி.மீ. ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போக்குவரத்து வசதி

ஹரித்துவார், ரிஷிகேசம் முதலிய இடங்களிலிருந்து நேராக பத்ரிநாத் சென்று வர பேருந்து வசதி உண்டு. அரசுப் பேருந்துகளும், தனியாரின் சொகுசுப் பேருந்து வசதியும் உண்டு. இவை தவிர, மினி பஸ் எனப்படும் வேன்களும், டூரிஸ்ட் டாக்சிகளும் உள்ளன. ஜோஷிமட் என்னும் இடத்திலிருந்து பத்ரிநாத் பாதையில் நுழையும் இடத்தில் நுழைவாயில் ஒன்று உள்ளது. இது காலை 6.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை திறந்திருக்கும்.

கேதார்நாத் செல்லும் பயணிகள் முதலில் ருத்ர பிரயாகைக்கு பேருந்தில் செல்ல வேண்டும். இங்கிருந்து கௌரிகுண்டம் செல்வதற்கு வெவ்வேறு பாதைகளில் பேருந்து வசதி உள்ளது. கௌரி குண்டத்திலிருந்து கேதார்நாத் 14 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்தத் தொலைவை நடந்தும், தண்டிகள் எனப்படும் பல்லக்குகளிலும், குதிரைகளிலும் செல்லலாம். ரிஷிகேசத்திலிருந்து கௌரிகுண்டத்திற்கு மொத்த தூரம் 211. கி.மீ.

யமுனோத்ரி செல்வதற்கு, பயணிகள் ரிஷிகேசத் திலிருந்து ஹனுமான்சட்டி வரை பேருந்தில் செல்ல வேண்டும். (ரிஷிகேசத்திலிருந்து ஹனுமான்சட்டி 211 கி.மீ.) இங்கிருந்து யமுனோத்ரியை அடைய 13 கி.மீ. தொலைவு நடந்து செல்ல வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கங்கோத்ரி செல்வதற்கு யாத்திரிகர்கள் லங்காச் சட்டி செல்ல வேண்டும். ரிஷிகேசத்திலிருந்து லங்காச் சட்டி அடைய 248 கி.மீ. பேருந்து அல்லது கார்களில் லங்காச்சட்டி அடையலாம். அங்கிருந்து கங்கோத்ரிக்கு 13 கி.மீ. நடந்து செல்ல வேண்டும்.

சாலை வசதி

பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி செல்வதற்கான சாலைகள் ஏற்ற இறக்கங்கள் கொண்ட மலைப்பாதைகள். ஆயினும் சாலைகள் நன்கு பராமரிக்கப்பட்டு வருவதால் மலைப்பாதை களில் பயணம் செய்வதே ஒரு சுகமான அனுபவம். இந்தச் சாலைகளில் உள்ள பெரிய நகரங்கள் தார்ச்சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளன.

சிறிய ஊர்களுக்கான சாலைகள் தார்ச்சாலைகள் அல்ல என்றாலும் இவையும் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன; எந்த வகையான வாகனங்களும் பயணம் செய்ய முடியும். உதாரணமாக குப்தகாசியிலிருந்து கௌரிகுண்டம் அடைவதற்கான 31 கி.மீ. சாலை; கங்கோத்ரியிலிருந்து ஹனுமான்சட்டி செல்வதற்கான 27 கி.மீ. சாலை. ஆனால் மழைக்காலங்களில் இந்தச் சாலைகளில் எந்த வாகனமும் செல்ல இயலாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயணத்தின்போது தேவையானவை

இந்த நான்கு புண்ணியத் தலங்களுக்கான யாத்திரைப் பயணிகள் பின்வரும் பொருட்களை எடுத்துச்செல்வது அவசியம். ஈரம் புகாத தரை விரிப்புகள்; மலைப்பாதையில் நடப்பதற்கு ஏற்ற காலணிகள்; கம்பளியால் ஆன காலுறைகள், கையுறைகள், தலைக்குத் தொப்பிகள், குளிர் தாக்காத ஸ்வெட்டர்கள், போர்த்திக்கொள்வதற்கேற்ற கம்பளங்கள், துண்டு; கொதிக்கவைக்கப்பட்ட குடிநீர், சிறிய முதலுதவிப்பெட்டி; டார்ச் விளக்கு, அதற்குத் தேவையான பேட்டரி செல்கள்; மெழுகுவர்த்தி. ஏனெனில், கங்கோத்ரி, யமுனோத்ரியில் மின்சார வசதி இல்லை. கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய இடங்களில் மின்வசதி உண்டு.

நடை பயணம்

கங்கோத்ரி, யமுனோத்ரி செல்லும் தொலைவைக் கடப்பதற்கு நடந்து செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டோம். பணவசதி உடையவர்கள் அவரவர் வசதிக்கேற்ப குதிரைகளையோ அல்லது தண்டியோ ஏற்பாடு செய்து கொள்ளலாம். இதுதவிர 'கண்டி' என்னும் வசதியும் உண்டு. இதை ஒரு ஆள் சுமந்து செல்வார். ஆனால் இதில் பயணம் செய்வது வசதியாக இருக்காது. தண்டி எனப்படும் பல்லக்கில் பயணம் செய்வது சுகமாக இருக்கும். சாமான்களைத் தூக்கிவர கூலியாட்களை அமர்த்திக்கொள்ளலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பாசிடர் டாக்சி கட்டணம் (சுமார்)

(ஒரு காரில் அதிகபட்சம் 5 பேர்)

புறப்படும் இடம்	செல்லும் இடம்	போக-வர நாட்கள்	கட்டணம் (ரூபாய்)
ஹரித்துவார்	பத்ரிநாத்	3	4000
ஹரித்துவார்	கேதார்-பத்ரிநாத்	5	6000
ஹரித்துவார்	சாரோ தாம் (நான்கு தலங்கள்)	10-11	8000
கூடுதல் கட்டணம் (ஒருநாளுக்கு)			400

குதிரை, தண்டி கட்டணம் (சுமார்)

புறப்படுமிடம்–செல்லுமிடம் (திரும்பி வருவது உள்பட)	தொலைவு (கி.மீ.)	குதிரை (ரூ.)	தண்டி (ரூ.)
ஹனுமான்சட்டி–யமுனோத்ரி	26	400	1000
கெளரிகுண்டம்–கேதார்நாத்	28	450	1200
கோவிந்த்காட்–கங்காரியா	28	500	1200
கங்காரியா–ஹேமகுண்டம்	10	350	800
கங்காரியா–மலர்பள்ளத்தாக்கு	10	350	800

தங்கும் வசதி

பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய எல்லா இடங்களுக்குச் செல்லும் சாலைகளிலும் அரசு விடுதிகள் அமைந்துள்ளன. இவற்றில் தங்குவதற்கு ஏற்கெனவே அனுமதி பெற்றிருக்க வேண்டும். இதற்காக தேஹ்ரி தர்பார் அல்லது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பௌடி கர்வால் ஆகிய இடங்களில் உள்ள பொதுப் பணித்துறை அதிகாரிகளிடமிருந்து மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன்பே அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

பெரிய நகரங்களில் தனியார் லாட்ஜ்கள் நிறைய உள்ளன. பணவசதியைப் பொறுத்து இவற்றைப் பயன்படுத்தலாம். சில நகரங்களில் ஆசிரமங்களும், தர்ம நிறுவனங்கள் நடத்தும் தங்கும் விடுதிகளும் உள்ளன. இவை தவிர, பாபா கம்ப்ளிவாலா சத்திரங்களும் முக்கிய நகரங்களில் இருக்கின்றன. சில ஊர்களில் அந்தந்த ஊரைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் கட்டி வைத்த விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வகை காட்டேஜ்களில் தங்கும் வசதி மட்டுமே உண்டு. சில காட்டேஜ்களில சமையல் செய்ய பாத்திரங்களும் கிடைக்கும். சமையலுக்குத் தேவையான பொருட் களை கடைகளில் வாங்கிக் கொள்ளலாம்.

கடைகள்

ஹரித்வார், ரிஷிகேசம், உத்தரகாசி, தெஹ்ரி, ஜோஷிமட் போன்ற நகரங்களில் பலவிதமான கடைகள் உள்ளன. பயணிகளுக்குத் தேவையான உணவுகள் புட்டியில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், பயணிகள் சமைக்க விரும்பினால் அதற்கேற்ப சமையல் பொருட்களும் கிடைக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமையல் எண்ணெய், காய்கறிகள், 'பழங்கள், பால் புட்டிகள், தேநீர் ஆகியவை கடைகளில் கிடைக்கின்றன. பெரும்பாலான பொருட்கள் குறைவான விலையில் கிடைக்கும். அஞ்சல் வசதியும், தந்தி, தொலைபேசி வசதிகளும் உண்டு.

ஆடைகள்

வியப்புறச் செய்யும் மலையுச்சிகள், மலைமுகடுகள், பனிப்பாய் விரித்த பள்ளத்தாக்குகள், பச்சை வனங்கள் சூழ்ந்த இந்தப் பகுதியில் குளிர் அதிகமாக இருக்கும் என்பதால் பயணிகள் கண்டிப்பாக கம்பளி ஆடைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே குறிப்பிட்டது போல காலுறைகள், கையுறைகள், ஸ்வெட்டர்கள், போர்வைகள் கொண்டு செல்ல வேண்டும். சில ஊர்களில் தர்மசாலைகளில் படுக்கையும் போர்த்திக் கொள்ள கம்பளங்களும் கிடைக்கின்றன.

உணவு

பத்ரிநாத்-கேதார்நாத் யாத்திரைக்கு அதிக நாட்கள் எடுக்காது. எனவே அதிக உணவுகளை எடுத்துச்செல்லத் தேவையில்லை. ஏனெனில், தெஹ்ரி, ஸ்ரீநகர், தேவப்ரயாகை, கர்ணபிரயாகை போன்ற ஊர்களில் எல்லாவிதமான பொருட்களும் கிடைக்கின்றன. ஹரித்துவார், டேராடூன் ஆகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நகரங்கள் நன்கு வளர்ச்சி பெற்ற நகரங்கள். இங்கே எல்லாப் பொருட்களும் கிடைக்கின்றன.

கூலிகள்

மலைப்பகுதிகளில் யாத்திரை செல்பவர்களுக்கு அவர்களுடைய பொருட்களை எடுத்துச்செல்ல கூலிகள் தேவைப்படுகிறார்கள். ஏனெனில் மலைப்பாதையில் பழக்கமில்லாத யாத்திரிகர்கள் பொருட்களையும் தூக்கிக்கொண்டு நடக்க இயலாது. பல நகரங்களில் பதிவு செய்யப்பட்ட கூலிகள் இருக்கிறார்கள். தெஹ்ரி, தர்பார், டேராடூன், கர்வால், சஹ்ரன்பூர் போன்ற இடங்களில் பதிவு செய்யப் பட்ட கூலிகளின் ஏஜென்ட்டுகள் உள்ளனர்.

பதிவு செய்த கூலிகளையே அமர்த்திக் கொள்ள வேண்டும். பதிவு செய்யப்படாத கூலிகளை அமர்த்திக் கொண்டால் பின்னால் தேவையற்ற சங்கடங்கள், வீண் தகராறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. கூலிகள் தவிர, குதிரைகள், கண்டி, தண்டி எனப்படும் பல்லக்கு போன்றவற்றிலும் சாமான்களை எடுத்துச் செல்லலாம். இயன்ற வரை அத்தியாவசிய பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்லுங்கள். சுமை குறைவாக இருந்தால் பயணம் சுகமாக இருக்கும்.

நடைபயணத்தில் கவனம்

அழகு சூழ்ந்த மலைப்பகுதியில் நடந்து செல்லும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயணிகள் பொதுவாக காணக்கிடைக்காத இயற்கைக் காட்சிகளை ரசிக்க விரும்புவார்கள். இதற்காக சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே நடக்க விருப்பப் படுவார்கள். இது மிகவும் ஆபத்தானது. அப்படியே இயற்கை அழகை ரசிக்க விரும்பினால், ஒரு இடத்தில் நின்று மலைகளின் அழகை ரசித்து விட்டு பிறகு பயணத்தைத் தொடரலாம். குதிரைகளிலோ தண்டியிலோ செல்பவர்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை.

கடல்மட்டத்திலிருந்து சுமார் 3500 மீட்டர் வரை உயரமுள்ள மலைப்பகுதிகளில் நீங்கள் யாத்திரை மேற்கொள்ள இருக்கிறீர்கள். மலைப் பகுதிகளில் தூய்மையான காற்று கிடைக்கும். ஆனாலும் நடந்து செல்வதன் காரணமாக களைப்பும் ஏற்படும். கால்களில் வலி ஏற்படலாம். இதை சமாளிக்க, உப்பு கரைத்த வெந்நீரை கால்களில் ஊற்றி, கால்களைக் கழுவிக் கொண்டு, அதற்கு மேல் எண்ணெயைத் தடவிக் கொண்டால் கால்வலி பறந்து விடும்.

காலநிலை

யாத்ரிகர்கள் காலநிலை பற்றியும் கவனம் வைக்க வேண்டும். பொதுவாக யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் போன்ற இடங்களில் கோடையிலும்கூட குளிராக இருக்கும். அதனால் தான் ஏப்ரல் முதல் ஜுன் வரையும், செப்டம்பர் முதல் அக்டோபர் மாதம் வரையும் இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாத்திரைக்கு ஏற்ற காலங்கள். ஜூலை, ஆகஸ்ட் இந்த இரண்டு மாதங்களும் மழைக்காலமாகும்.

இங்கே வெப்பநிலை ஒரேசீராக இருக்காது. திடீரென்று மாறக்கூடும். சில சமயங்களில் மேகங்கள் சூழ்ந்து மூட்டமாக இருக்கும். திடீரென்று பலத்த மழை பெய்யக்கூடும். சில சமயங்களில் பனிமழை பொழியும். ஏப்ரல் மே மாதங்களில் பலத்த காற்று வீசும். புழுதிப் புயல் எனப்படும் மண்ணைவாரி வீசும் காற்றும்கூட இருக்கும்.

ஹரித்துவார்—பத்ரிநாத்

ரிஷிகேசம், ஹரித்துவாரிலிருந்து 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்த இரண்டு நகரங்களுக்கும் இடையே ரயில், சாலைப் போக்கு வரத்து வசதி உண்டு. இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையே பேருந்துகளும் டாக்சிகளும் எந்தநேரமும் இயங்கியபடியே இருக்கின்றன.

கோட்துவாரா என்ற ஊருக்கும் ரிஷி கேசத்துக்கும் சாலைவழி இணைப்பு இருக்கிறது. கோட்துவாராவிலிருந்து ருத்ர பிரயாகைக்கு 171 கிமீ. ருத்ர பிரயாகையிலிருந்து பத்ரிநாத் 159 கி.மீ.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3

ஹரித்துவார்

சிவாலிக் குன்றுகளின் அடிவாரத்தில் கங்கை நதியின் கீழ்க்கரையில் அமைந்துள்ள நகரம் இது. கங்கை நதி இங்கிருந்து குட்டிக் குட்டிக் கால்வாய் களாகப் பிரிகிறது. இமாலயத்தை 320 கி.மீ. கடந்து இங்கு சமவெளியில் கங்கை பாய்கிறாள்.

சிவாலிக் என்ற இடம் கடல்மட்டத்திலிருந்து 951 அடி உயரத்தில் உள்ளது. கோவில்களின் முதல் நுழைவாயில் ஹரித்துவாரிலிருந்து துவங்குகிறது. இதற்கு **கங்காத்வாரம், மாயாபுரி** என்ற பெயர்களும் உண்டு.

பண்டைக் காலத்தில் இங்கே **கங்காத்வார்** என்ற கோயில் இருந்ததாக நம்பப்படுகிறது. பல நூற்றாண்டு களுக்கு முன்பு ஸகரர்களை எரித்த கபில மாமுனிவர் இமய மலைகளில் தவம் புரிந்ததாக கூறப்படுகிறது. அவர் தவம் புரிந்த இடம் **கபில ஸ்தலம்** என்றும் **மாயாபுரி** என்றும் அழைக்கப்படுகிறது. இங்கே கங்கை ஒரு மைல் அகலம் இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கங்கைக்கரை முழுவதும் கட்டிடங்களும் கோயில்களும்தான் இருக்கின்றன. இங்கிருந்துதான் பத்ரிநாத், கேதார்நாத் யாத்திரை துவங்குகிறது. ஹரித்துவார் மிகப் புராதனமான நகரம், மிகவும் புனிதமான நகரம். நாட்டின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் யாத்திரை வருகிறார்கள். குறிப்பாக ஏப்ரல் மே மாதங்களில்.

விழாக்காலம்

கங்கா தசரா என்ற விழா மிகவும் பிரசித்தி பெற்றது. கங்காதசரா நாளில்தான் கங்கைத்தாய் முதன்முதலில் ஹரித்துவாரின் தரையைத் தொட்டதாக நம்பப்படுகிறது. அதனால்தான் ஆண்டுதோறும் கங்காதசரா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிவபிரான் இந்த நாளில்தான் முதன்முதலாக கங்கையை முடியிலிருந்து கீழே விடத் தொடங்கினார் என்பது ஒரு நம்பிக்கை.

வியாழன் மேஷராசியில் பிரவேசிக்கும்போது - 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்கு நடைபெறும் **கும்பமேளா** மிகவும் பிரசித்தி பெற்றது. கும்பமேளா ஏப்ரல் மாதத்தில்தான் வருகிறது. இதுதவிர ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் **அர்த்த கும்பமேளாவும்** புகழ்பெற்ற விழாவாகும். கும்ப மேளாவில் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்க்க வேண்டிய இடங்கள்

ஹர்கி பைரி, மிருத்யுஞ்சய் மகாதேவ், குஷாவர்த் காட், மாயாபூர் அணை, சுபாஷ்காட், நீல் தாரா, குருத்வாரா சிங் ஷாபா, பிரம்ம குண்டம், சப்த சரோவர், பாவன் தாம், ராகவேந்திரர் கோயில், பீம் கோடா ஆகியவை. நாட்டிலேயே பாரத மாதாவுக்காக ஒரு கோயில் இருக்கிறது என்றால் அது இங்கேதான்.

ஹரித்துவார் அருகே கார்கில் இருக்கிறது. நீல பர்வதத்தில் நீலா தேவியும், பில்வ பர்வதத்தில் பில்வேச்சர் மஹாதேவரும் கோயில் கொண்டிருக்கிறார்கள். ஹரித்துவாரின் பிரதான வாயிலுக்கு ஹர்கி பைரி என்று பெயர். இதில் விஷ்ணுவின் பாதச் சுவடுகளைக் காண்கிறோம். இதன் அருகே பீமன் காவல்காத்த பீமகோடா குளமும் ஒரு மைல் தூரத்தில் மாயாபுர நகரமும் உள்ளன. இங்கே மாயா தேவி, பைரவர், நாராயணர்கள் கோயில்கள் உள்ளன.

ஹர்கி பைரியின் சிறப்பு என்னவென்றால், 'ஹரி' என்றால் விஷ்ணு; 'பைரி' என்றால் பாதம். பத்ரி நாத்திலிருந்து ஹரித்துவாரம் வரை உள்ள விஷ்ணுவின் பாதம் ஹரித்துவாரின் கரையில் அமைவதாக நம்பிக்கை. தினமும் மாலையில் கங்கைக்கு - அதாவது விஷ்ணுவின் பாதத்திற்கு ஆரத்தி எடுப்பார்கள். கோயில்களிலிருந்து தீபாராதனை காட்டப்படும். பெரிய மணியடித்து, கரைமுழுவதும் பெரிய தீபங்கள் கங்கைக்குக் காண்பிக்கப்படும். உயர்ந்த விஷ்ணு பகவானுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுக்கப்படும் தீப ஆராதனை என்றும் கூறலாம்; பாவங்களைப் போக்கும் கங்கைத்தாய்க்கு ஆரத்தி என்றும் கூறலாம். பக்தர்கள் சிறிய இலை மடிப்புகளில் திரிஎண்ணெய் வைத்த தீபங்களை வாங்கி தீபம் ஏற்றி கங்கையில் விடுவார்கள். இதைத் தரிசிப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் மதியம் முதலாகவே காத்துக்கொண்டிருக்கும். மாலையில் நதியில் ஆயிரக்கணக்கான தீபங்கள் மிதக்கின்ற காட்சி கண்கொள்ளாக்காட்சி.

மானஸதேவி மந்திர்: மற்றொரு முக்கியமான கோயில். மலையின்மீது அமைந்திருக்கும் இந்தக் கோயிலுக்குச் செல்ல 'வின்ச்' எனப்படும் பெட்டிகள் உள்ளன. மின்சாரத்தால் இயங்கும் கம்பி ஒன்று விஞ்ச் பெட்டிகளை மேலே இழுத்துச்செல்லும்.

சண்டிதேவி மந்திர்: சிவாலிக் சிகரத்தில் நகரத்திலிருந்து ஐந்து கி.மீ. தொலைவில் உள்ளது. போகின்ற பாதையில் உணவுக்கான வசதி ஏதும் இல்லை. எனவே முன்னேற்பாட்டுடன் செல்ல வேண்டும்.

பீமகோடா மந்திர்: பீமன் குளிப்பதற்காக பூமியைத் தோண்டியதாக நம்பப்படுகிற பீமகோடா குளம் நகரிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது.

சப்தரிஷி ஆசிரமம்: காஸ்யபர், பரத்வாஜர், ஆத்ரி, கௌதமர், ஜமதாக்னி, விஸ்வாமித்திரர், வசிஷ்டர் ஆகிய ஏழு ரிஷிகளும் இங்கே தவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யவே கங்கை ஏழு அருவிகளாக வந்ததாக நம்பிக்கை. இன்றும் கங்கையில் ஏழு அருவிகள் உள்ளன. 1954இல் சப்தரிஷி ஆசிரமம் கட்டப்பட்டது. இதில் சிவபெருமானின் கோயில் அமைந்திருக்கிறது.

பரமார்த்த ஆசிரமம்: சுவாமி சுக்தேவானந்த் நிர்மாணித்த கோயில் இது. பாரதத்தின் ரிஷிகள், முனிவர்களின் சிலைகள் அமைந்துள்ளன.

பாரத மாதா மந்திர்: பரமார்த்த ஆசிரமத்தின் அருகில் அமைந்துள்ளது. சிற்பவேலைப்பாட்டுடன் கூடிய பாரதமாதா சிலை உள்ளது.

சாந்தி குண்டம்: ஹரித்துவாரிலிருந்து ரிஷிகேசம் செல்லும் பாதையில் அமைந்துள்ளது.

சாது பேலா ஆசிரமம்: பரமார்த்த ஆசிரமத்தின் அருகிலேயே உள்ளது. பக்தர்கள் தங்குவதற்கேற்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஹரித்துவாரில் தக்ஷனுடைய கோயிலும் உள்ளது. ஸனத் குமாரர் சித்தி அடைந்ததும் இந்த இடம்தான். ஸதி தன் உடலைத் தியாகம் செய்த இடம் ஸதி குண்டமாகும். இங்கிருந்து நான்கு மைல் தொலைவில் ஜ்வாலாபூர் அமைந்துள்ளது.

ஹரித்துவார் இன்று நன்கு வளர்ச்சி பெற்ற நகரம். அனைத்துவிதமான வசதிகளும் உள்ளன. பல்வேறு சம்பிரதாயங்களைச் சேர்ந்த துறவியர்கள், ஆசிரமங்கள் உள்ளன. ஹரித்துவார் மற்றும் அதன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுற்றுப்புறத்தைப் பற்றி விளக்கும் கையேடுகள் விற்பனைக்குக் கிடைக்கின்றன. நூற்றுக் கணக்கான தர்மசாலைகள் இங்கே உள்ளன.

ஹரித்துவாரிலிருந்து டேராடூன் செல்லும் வழியில் 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது **ரிஷிகேசம்**. கங்கையின் வலது பக்கத்தில் உள்ள ரிஷி கேசம் சிறிய ஊராக இருந்தாலும் முக்கியத்துவம் வாய்ந்தது. சங்கரர் நிறுவிய பரதாலயமும், புனித நீராட பல கோயில்களும் உள்ளன. இங்குள்ள திரிவேணி கட்டத்தில் பிண்ட ஸ்ரார்த்தம் செய்வார்கள். பாபா கம்ப்ளிவாலா மடத்தின் தலைமையகம் இங்குதான் இருக்கிறது. இங்குள்ள **சத்திய நாராயணர் கோயில்** மிகவும் பிரசித்தி பெற்றது. ரிஷிகளும் மகான்களும் வாழ்ந்த இடம் இது. உத்தராக்கண்ட் யாத்திரை இங்கிருந்துதான் துவங்குகிறது எனலாம்.

Latest Information For Chardham Yatra

Rishikesh to Yamunotri

Rishikesh to Jankibai Chatti	....	216 km. Motor
Jankibai Chatti to Yamunotri	....	6 km. Trek

Yamnotri to Gangotri

Yamunotri to Jankibai Chatti	....	6 km. Trek
Jankibai Chatti to Gangotri	....	222 km. Motor
Rishikesh to Gangotri	....	248 km. Motor

Gangotri to Kedarnath

Gangotri to Gaurikund	....	334 km. Motor
Gaurikund to Kedarnath	....	14 km. Trek

Rishikesh to Kedarnath

Rishikesh to Gaurikund	....	209 km. Motor
Gaurikund to Kedarnath	....	14 km. Trek

Kedarnath to Badrinath

Kedarnath to Gaurikund	....	14 km. Trek
Gaurikund to Badrinath	....	229 km. Motor

Note : There is no treking for Gangotri Yatra & Sri Badrinath Yatra.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्री बदरीनाथ मंदिर 1 Sri Badrinath Temple



श्री केदारनाथ मंदिर 2 Sri Kedarnath Temple

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्री गंगोत्तरी मंदिर 3 Sri Gangotri Temple



श्री यमुनोत्तरी मंदिर 4 Sri Yamunotri Temple

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्री चारों धाम दर्शन 5 Sri Char Dham Darshan



श्री बदरीनाथ पंचायतन 6 Sri Badrinath Panchayatan

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



श्री तुंगनाथ मंदिर 7 Sri Tungnath Temple



श्री त्रियुगीनारायण मंदिर 8 Sri Triuginarayan Temple

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



गोविन्द घाट 9 Govind Ghat



तप्त कुण्ड बदरीनाथ 10 Taptkund Badrinath

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



श्री हेमकुण्ट साहिब 11 Sri Hemkunt Sahib



श्री लक्ष्मण मन्दिर 12 Sri Lakshman Mandir

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



फूलों की घाटी 13 Valley of Flowers

रोपवे औली (जोशीमठ) 14 Ropeway Auli (Joshimath)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4

ரிஷிகேசம்

ஹரித்துவாரிலிருந்து வடக்கே 24 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கிறது. இமாலயத்தின் சிகரத்தில், கங்கைக் கரையில் அமைந்திருக்கிற இங்கிருந்துதான் சாரோ தாம் யாத்திரை துவங்குகிறது. ஹரித்துவாரிலிருந்து பகலில் நான்கு ரயில்களும், அரைமணிக்கொருமுறை பேருந்துகளும் நம்மை ரிஷிகேசம் கொண்டு சேர்க்கின்றன.

நாற்புறமும் பசுமைசூழ்ந்த வனப்பகுதிகள், கிடுகிடுக்க வைக்கும் பள்ளத்தாக்குகள் வழியே பாய்ந்தோடி வருகிறது புண்ணிய நதியான பாகீரதி. புராதன காலத்திலிருந்தே மகான்களையும் ரிஷிகளையும் ஈர்த்துவந்த பகுதி. ராமர், லட்சுமணர், பரதன் என பலரும் இங்கே தவம் புரிந்துள்ளனர். புராணக் கடவுள்கள் மட்டுமல்ல, ராமானுஜரும் ஆதி சங்கரரும் கூட இங்கே தவம் புரிந்திருக்கிறார்கள்.

ரிஷிகேசம் சாதாரண மனிதர்கள் சென்றடைய முடியாத பகுதியாக இருந்தது. விஞ்ஞானத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரைவான வளர்ச்சி, இன்று எவரும் எளிதாக இங்கே சென்று வர வழிசெய்திருக்கிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கே அணிஅணியாக வந்து கொண்டே இருக்கிறார்கள். இருந்தாலும் புண்ணியபூமியான ரிஷிகேசம் இன்றும் அதே கோலத்தில் காட்சி தந்து கொண்டிருக்கிறது.

பார்க்க வேண்டிய இடங்கள்

நீலகண்டர் கோயில்: ரிஷிகேசத்திலிருந்து சுமார் ஏழு கி.மீ. சென்றால் நீலகண்டர் என்ற பெயர் பெற்ற சிவனாலயம் காணலாம். வில்வமரங்கள் அடர்ந்த இந்தப் பாதை எவருடைய மனத்தையும் ஆனந்தம் கொள்ளச் செய்யும்.

பரத மந்திர்: ரிஷிகேச நகருக்குள்ளேயே, ஒரு பரபரப்பான கடைவீதியருகே அமைந்திருக்கிறது இந்தப் புகழ்பெற்ற கோயில். ராமனின் தம்பி பரதன் இங்கே தவம் செய்ததாக நம்பப்படுகிறது. இந்தக் கோயில் பௌத்த கோயில்களின் வடிவத்தில் அமைந்துள்ளது. காட்சிக்கு எளிய கோயிலாக இருந்தாலும், புராண முக்கியத்துவம் கொண்டது.

திரிவேணி காட்: பரத மந்திரை அடுத்து, கங்கைக் கரையில் அமைந்திருக்கிறது. இங்கேதான் லோக கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் இமயத்திலிருந்து வந்து கலக்கின்றன. எனவேதான் 'திரிவேணி' என அழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹரித்துவாரில் ஹரிகி பைரிக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ, அதே அளவுக்கு இதற்கும் முக்கியத்துவம் உண்டு. இதன் அருகிலேயே ரகுநாத் மந்திரும் இன்னும் சில சிறிய கோயில்களும் உள்ளன.

குருத்வாரா: ரிஷிகேசத்திலிருந்து லட்சுமண் ஜூலா செல்லும் வழியில் கங்கைக் கரையில், நவீன கட்டடக்கலையுடன் கட்டப்பட்டுள்ளது இந்த அழகிய குருத்வாரா. ஹேமகுண்ட் நிர்வாக அறக் கட்டளை இதை நிர்மாணித்திருக்கிறது. தங்குவதற்கு வசதியான அறைகள் கட்டப்பட்டுள்ளன. குருத்வாராவின் அழகிய தோற்றம் தூரத்திலிருந்தே பயணிகளை ஈர்க்கிறது.

லட்சுமண் ஜூலா: ரிஷிகேசத்திலிருந்து 5 கி.மீ. தொலைவு இமாலயத்தின் பக்கம் சென்றால் இதை அடையலாம். கங்கையின்மீது கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. லட்சுமணன் தவம் செய்ததாகக் கருதப்படும் இந்த இடத்தில், கங்கையைக் கடப்பதற்காக தனது அம்புகளைக் கொண்டே பாலத்தைக் கட்டியதாக நம்பப்படுகிறது. தூண்கள் ஏதும் இல்லாத தொங்கும் பாலத்தின் மீது ஆடிஆடி நடந்து செல்வது இனிய அனுபவம். இப்போது பாலம் இரும்புக் கம்பிகள் கொண்டு இழுத்துக்கட்டப்பட்டுள்ளது.

ரிஷிகேசத்திலிருந்து நமது யாத்திரையில் முதலில் யமுனோத்ரி செல்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்தராக்கண்டத்தின் புகழ்பெற்ற சில சிகரங்கள்

சிகரத்தின் பெயர்	உயரம் (மீட்டர்)
நந்தாதேவி	7,818
காமெட்	7,758
மாணா	7,274
சௌகாம்பா	7,140
திரிசூல்	7,122
தூனகிரி	7,068
பாஞ்சூலி	6,905
சாங்பாங்	6,866
நந்தகோட்	6,863
ம்ருக்தூனி	6,857
கங்கோத்ரி	6,672
பன்வாலீதார்	6,665
சிவலிங்	6,544
நீலகண்ட்	6,597
கீர்த்திஸ்தம்ப்	6,402
பந்தர்பூஞ்ச்	6,317
நந்தாதூண்டி	6,314
சுவர்க்கரோஹிணி	6,254
ஹனுமான் ஷிகார்	6,076

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சில முக்கியத் தலங்களின் உயரம்

தலத்தின் பெயர்	உயரம் (அடி)
பத்ரிநாத்	10,350
கேதார்நாத்	11,750
ஊகிமட்	4,500
ராம்பாரா	9,000
கௌரிகுண்டம்	6,500
மத்யமஹேஷ்வர்	11,474
துங்கநாத்	12,070
ருத்ரநாத்	11,670
அனுசுயாதேவி	6,500
ஹனுமான் சட்டி	8,000
ரூப் குண்டம்	16,000
சந்திரவதனி	8,000
சூர்காந்த தேவி	8,000
ஹேமகுண்டம்	14,300
கங்கோத்ரி	10,300
யமுனோத்ரி	10,500
பௌடி	5,500
வசுந்தரா	12,000
ஜோஷிமட்	6,150
உத்தரகாசி	3,500
கௌமுக்	12,770
வசுதாரா அருவி	13,000
பாண்டுகேஷ்வர்	6,450

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5

யமுனோத்ரி

யமுனோத்ரி மகிமை

அசித முனிவர் தினமும் யமுனையிலும் கங்கை நதியிலும் குளித்தவர். முதுமை அடைந்ததன் காரணமாக கங்கோத்ரிக்குச் செல்ல முடியாத காரணத்தால் கங்கை நதியே அவருக்காக யமுனோத்ரி வந்தது என்பது ஒரு நம்பிக்கை.

அஷ்ட சிரஞ்சீவிகளில் ஒருவரான அனுமான் இலங்கையை எரித்த பின் தன் வாலை இங்கே அணைத்ததால் இது 'பந்தர் பூஞ்ச்' ஆயிற்று.

ஸ்கந்த முனிவர் கூறினார்: நாரதரே, யமுனை நதியில் குளிப்பதால் மட்டுமே மனிதன் மோட்ச லோகத்தை அடைவதில்லை. எவன் குளித்து தரிசனம் செய்துவிட்டு ராத்ரி நிவாஸ் செய்கிறானோ அவனுடைய பாவங்கள் எல்லாம் சாம்பலாகி விடுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யமுனோத்ரி ஆலயம்

கடல்மட்டத்திலிருந்து 3,323 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. ஹரித்துவாரிலிருந்து 246 கி.மீ தொலைவிலும் ஜானகிபாய் சட்டியிலிருந்து 6 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இதுவே யமுனையின் உற்பத்தி ஸ்தானம். யமுனையின் இடதுகரையிலேயே கட்டப்பட்டிருக்கிறது யமுனைக் கோயில்.

ஏப்ரல் அல்லது மே மாதம் அக்ஷய திதியன்று கோயில் திறக்கப்பட்டு தீபாவளியன்று மூடப் படுகிறது. மே, ஜூன், செப்டம்பர், அக்டோபர் மாதங்கள்தான் உகந்த மாதங்கள். நவம்பர் முதல் ஏப்ரல் வரை பனிக்கட்டிகள் மூடிக்கிடக்கும்.

இங்குள்ள வெந்நீர் ஊற்றுக்களில் முக்கியமானது 'சூர்யகுண்ட்' ஆகும். சூரியகுண்டம் அருகில் திவ்ய சிலா பூஜிக்கப்படுகிறது. 'யமுனாபாய் குண்ட்' என்ற நீரூற்றும் உண்டு.

காரில் வருபவர்கள் டேராடூன், முசோரி போன்ற இடங்களிலிருந்து யமுனோத்ரி வர இயலும். பொது போக்குவரத்தை நம்பியிருப்பவர்கள் ரிஷிகேசத்தி லிருந்துதான் வர வேண்டும். ரிஷிகேசத்திலிருந்து ஹனுமான்சட்டிக்கு பேருந்து வழியாக 209 கி.மீ. தூரமும், பின்னர் நடைப்பயணமாக 13 கி.மீ. தூரமும் பயணம் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹரித்துவார் யமுனோத்ரி பாதை

புறப்படும் இடம்	செல்லும் இடம்	தொலைவு (கி.மீ.)	உயரம் (மீட்டர்)
ஹரித்துவார்	ரிஷிகேசம்	24	340
ரிஷிகேசம்	நரேந்திரநகர்	16	1,067
நரேந்திர நகர்	சம்பா	46	1,524
சம்பா	தெஹ்ரி	21	770
தெஹ்ரி	தாராசு	37	1,036
தாராசு	பிரம்மகால்	15	1,158
பிரம்மகால்	பார்கோட்	40	1,828
பார்கோட்	சயானாசட்டி	29	1,982
சயனாசட்டி	ஹனுமான்சட்டி	5	2,134
ஹனுமான்சட்டி	பூல்சட்டி (நடை)	5	2,561
பூல்சட்டி	ஜானகிபாய்சட்டி	2	2,576
ஜானகிபாய்சட்டி	யமுனோத்ரி	6	3,323

டேராடூன் யமுனோத்ரி பாதை

புறப்படும் இடம்	செல்லும் இடம்	தொலைவு (கி.மீ.)	உயரம் (மீட்டர்)
டேராடூன்	முசோரி	36	1,921
முசோரி	கெம்ப்டி அருவி	12	1,524
கெம்ப்டி	யமுனா பாலம்	16	772
யமுனா பாலம்	டம்டா	25	1,372
டம்டா	நௌகான்	28	1,524
நௌகான்	பார்கோட்	11	1,828
பார்கோட்	சயானாசட்டி	29	1,982
சயானாசட்டி	ஹனுமான்சட்டி	5	2,134
ஹனுமான்சட்டியிலிருந்து நடைபயணம்		13	

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்க்க வேண்டிய இடங்கள்

நரேந்திர நகர்: ரிஷிகேசத்திலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் இரண்டு பாதைகள் பிரிகின்றன. முனிசிரேதி வழியாக பத்ரிநாத் செல்லும் பாதை ஒன்று. கங்கோத்ரி, யமுனோத்ரி செல்லும் பாதை மற்றொன்று. தெஹ்ரி, கர்வாலின் மாவட்ட அரசு அலுவலகங்கள் இங்கு உள்ளன. இங்கிருந்து ஒன்பது கி.மீ. தொலைவில் உள்ள குஞ்சபுரி என்ற இடத்தில் மன்னர் நரேந்திரஷாவின் அரண்மனை உள்ளது.

சம்பா: ரம்மியமான காலநிலையைக் கொண்ட இடம். ரிஷிகேசத்திலிருந்து 62 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கிருந்து முசோரிக்குச் செல்ல பாதை உண்டு. இந்தப் பாதையில் 21 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அழகான சூர்காந்த தேவியின் கோயில்.

டோரபாட்டா: யமுனோத்ரி, கங்கோத்ரிக்குச் செல்பவர்கள் தெஹ்ரிக்குப் போகும் பாதையில் செல்லாமல் நேராக தாராசு போக வேண்டும். இங்குதான் உத்தரகாசி, ஸ்ரீநகர் செல்லும் பாதைகள் சந்திக்கின்றன.

தெஹ்ரி: தெஹ்ரி கர்வாலைச் சேர்ந்த சுதர்ஷன் ஷா மகாராஜாவால் நிர்மாணிக்கப்பட்டது. பாகீரதி நதியும், பிலன்கங்காவும் சங்கமமாகும் இடம். தேவ பிரயாகை, உத்தரகாசி, ஸ்ரீநகர், தில்வாரா செல்லும் நான்கு பாதைகளும் கூடும் இடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாராசு: உத்ரகாசி மாவட்டத்தின் எல்லையில் உள்ளது. பாகீரதி நதியும் கூர்மோலா நதியும் சங்கமமாகிற இடம். பாகீரதி நதியின் கரையில் ஒரு பாதை பிரிந்து நேராக கங்கோத்ரி செல்கிறது.

பார்கோட்: இந்த நகருக்கான பாதை ராரிகா தண்டா என்ற இடம் வரை உயரமாக ஏறி, பின்னர் பார்கோட்டுக்கு இறங்குகிறது. மலையும் பள்ளத் தாக்கும் கண்ணுக்கினிய காட்சிகள். இங்கிருந்து பந்தர்பூஞ்ச் பார்க்க இயலும். இங்கிருந்து ஒரு பாதை யமுனைக்கரையோரமாக யமுனோத்ரி செல்கிறது.

சயானாசட்டி: யாத்ரிகர்கள் தங்குவதற்கு உகந்த இடம். அருகில் சங்கானி, குத் நவுரி ஆகிய கிராமங்கள் உள்ளன.

ஹனுமான்சட்டி: முந்தைய பகுதியைப் பார்க்க.

ஜானகிபாய்சட்டி: ஏற்றமான மலைப்பாதையில், யமுனோத்ரியிலிருந்து ஆறு கி.மீ. தூரத்தில் உள்ளது. குதிரைகளும், தண்டிகளும் இங்கே கிடைக்கும். யமுனோத்ரி பாதையில் உள்ள கடைசி இடம். காவல்துறை, அஞ்சல்துறை அலுவலகங்கள் உள்ளன. சில கடைகளும் உள்ளன. யாத்திரைக் காலங்களில் மட்டுமே இவை திறந்திருக்கும்.

ரண்தீர் பதிப்பகம்
ரெயில்வே ரோடு
ஆர்த்தி ஹோட்டல் பின்புறம்
ஹரித்துவார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6

கங்கோத்ரி

க்ஷேத்திர மகிமை

கடல்மட்டத்திலிருந்து 3,140 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இக்கோயிலை, கர்வாலின் கூர்க்கா பிரிவைச் சேர்ந்த ஜெனரல் அமர்சிங் தாப்பா என்பவர் 18ஆம் நூற்றாண்டில் கட்டினார்.

கோயில் நிற்கும் கல், பகீரதன் தவம் செய்யக் காலை ஊன்றி நின்ற இடமாகக் கருதப்படுகிறது. அதனால்தான் 'பகீரதசிலா' என்று பெயர்பெற்றது.

இங்குதான் பாண்டவர்கள் அசுவமேத யாகம் செய்ததாக ஒரு நம்பிக்கை. கங்கை, யமுனை, லட்சுமி மூவருக்கும் ஆதிசங்கரர் கோயில் எடுத்தாராம்.

புத்தம்புதிதாய் பிறந்து ஓடிவரும் கங்கைநீர் தெள்ளத் தெளிவாக இருக்கும். எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் வைத்திருக்கலாம். கங்கையில் நீராடினால் அவன் பாவங்கள் அனைத்தும் களையப் படுவதாக ஒரு நம்பிக்கை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கங்கைத்தாய் கோயில்

யமுனோத்ரி கோயிலைப் போலவே இதுவும் பனிக்காலங்களில் மூடப்படுகிறது. மே, ஜூன், செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் யாத்திரைக்கு உகந்த காலம். ஜூலை முதல் செப்டம்பர் வரை மழைக்காலம். இக்கோயில் பூஜாரிகள் அருகில் உள்ள முக்வா என்ற கிராமல் வசிக்கிறார்கள்.

கங்கைத்தாயின் கோயில் பாகீரதி எனப்படும் கங்கை நதியின் வலதுபுறம் அமைந்திருக்கிறது. ஒரு சிறிய குகையிலிருந்து வெளிப்படும் பாகீரதி சறுக்குப் பனிப்பாறைகளின் வழியாக, நுரைத்துக்கொண்டு வீராவேசமாக ஓடிவருகிறாள். வடமேற்காகத் திரும்பி கங்கோத்ரியை அடைகிறாள். கங்கை வடக்கில் திரும்பியதால்தான் 'கங்கோத்ரி' ஆயிற்று. நுரைத்துக் கொண்டு வரும் நதியை திபெத்திலிருந்து வரும் யாத்ரிகர்கள் தூரத்திலிருந்தே காண இயலும்.

கங்கை பிறக்குமிடம் கௌமுக். 4,255 மீட்டர் உயரத்தில் உள்ள கௌமுக்கை அடைவது மிகவும் கடினம். கங்கோத்ரிக்கு அப்பால் ஒற்றையடிப் பாதை கூடக்கிடையாது.

இந்தப் பள்ளத்தாக்கின் மதில்கள் சுமார் 6,000 அடி உயரமாக, பார்க்கவே வியப்பும் அச்சமும் ஏற்படுத்துகின்றன. இங்கே பல நதிகள் சேர்ந்து, கீழே அலக்நந்தாவுடன் ருத்ரபிரயாகையில் சங்கமாகி ஓடுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யமுனோத்ரி கங்கோத்ரி பாதை

புறப்படும் இடம்	செல்லும் இடம்	தொலைவு (கி.மீ.)	உயரம் (மீட்டர்)
யமுனோத்ரி (நடை)	ஹனுமான்சட்டி	13	2,134
ஹனுமான்சட்டி	சயானாசட்டி	5	1,982
சயானாசட்டி	பார்கோட்	29	1,828
பார்கோட்	தாராசு	55	1,036
தாராசு	உத்ரகாசி	26	1,158
உத்ரகாசி	கங்கோரி	4	1,219
கங்கோரி	மனேரி	6	1,372
மனேரி	பாட்வாரி	19	1,677
கங்நானி	சுகி	32	2,744
சுகி	ஜாலா	7	2,439
ஜாலா	ஹர்சில்	6	2,591
ஹர்சில்	லங்கா	13	2,652
லங்கா (நடை)	பைரான்காட்டி	3	2,652
பைரான்காட்டி	கங்கோத்ரி (நடை)	10	3,140

குறிப்பு: ஹரித்துவாரிலிருந்து நேராகவும் கங்கோத்ரி செல்லலாம். ரிஷிகேசம், நரேந்திர நகர், சம்பா, தெஹ்ரி வழியாக தாராசு (144 கி.மீ.) சென்று பிறகு மேலே குறிப்பிட்டுள்ள அதே பாதையில் தாராசு விலிருந்து கங்கோத்ரி செல்லலாம்.

யமுனோத்ரியிலிருந்து கங்கோத்ரி செல்பவர்கள் தாராசு செல்லாமல், நேராகவும் செல்ல முடியும்.

கங்கோத்ரியிலிருந்து கேதார்நாத்துக்கு ஸ்ரீநகர். ருத்ர பிரயாகை வழியாக (343 கி.மீ.) செல்லலாம். குப்தகாசி, ராம்பூர் வழியாகவும் (348 கி.மீ.) செல்லலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷிகேசம் கங்கோத்ரி பாதை

புறப்படும் இடம்	செல்லும் இடம்	தொலைவு (கி.மீ.)	உயரம் (மீட்டர்)
ரிஷிகேசம்			340
ரிஷிகேசம்	நரேந்திரநகர்	16	1,060
நரேந்திரநகர்	சம்பா	46	1,524
சம்பா	தெஹ்ரி	21	778
தெஹ்ரி	தாராசு	37	1,036
தாராசு	உத்ரகாசி	28	1,156
உத்ரகாசி	லங்கா சட்டி	87	2,652
லங்காசட்டி	பைரான்காட்டி	3	2,652
பைரான்காட்டி	கங்கோத்ரி	10	3,140

குறிப்பு: மொத்தம் 248 கி.மீ. வாகனத்தில் செல்லலாம்.

பார்க்க வேண்டிய இடங்கள்

உத்ரகாசி: பாகீரதி நதிக்கரையில் உள்ள இது, ஐந்து காசிகளில் ஒன்று. காசியைப் போலவே இங்கும் இரண்டு நதிகள் ஊருக்கு வெளியே கலக்கின்றன. விஸ்வநாதர் கோயில் இங்கே உள்ளது. கோயில் நடுவே ஒரு திரிசூலம் இருக்கிறது. ஏகாதசருத்ரருக்கு ஜெய்ப்பூர் மன்னர் கட்டிய கோயில் ஒன்றும் உண்டு. ஜடபரதரின் ஆசிரமம் ஒனறும் இதர பல ஆசிரமங்களும் உள்ளன. காளி கோயில, பரசுராமர் கோயிலும் உள்ளன. இதன் சிகரமான வாரணாவத பர்வதம் பர்வத ராஜனாகவே திகழ்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகரசங்கராந்தியை முன்னிட்டு ஏழு நாட்கள் விழா நடைபெறும். மலையேற்றப் பயிற்சிப் பள்ளி இங்கே அமைந்திருக்கிறது.

கங்கோரி: உத்ரகாசியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அருகே டோடிட்டால் ஏரி நடந்து செல்லும் தூரத்தில் உள்ளது.

மனேரி: பாகீரதி நதியில் மனேரி-பாலி என்ற அணை கட்டப்பட்டுள்ளது. அணையின் உயரம் 39 மீட்டர்.

கங்நானி: வெந்நீர் ஊற்றுகள் உள்ள இடம். தியானம் செய்வதற்கேற்ற அமைதியான சூழல்.

ஹர்சில்: சிறிய ஊர். லட்சுமிநாராயணன் கோயில் அமைந்துள்ளது.

லங்காசட்டி: யாத்ரிகர்கள் தங்கக்கூடிய இடம். இந்த இடம் வரைதான் வாகனங்கள் வர இயலும். அதற்குமேல் உள்ள பாதைகள் கப்பிச்சாலைகள்.

பைரான்சட்டி: யாத்ரிகர்கள் தங்குவதற்கான கடைசி இடம். இங்கிருந்து 3 கி.மீ. நடந்து கங்கோத்ரி செல்ல வேண்டும். ஜானவி நதியும் பாகீரதி நதியும் சங்கமிக்கும் அழகிய இடம்.

கௌமுக்: கங்கையின் பிறப்பிடம். மிகக் கடினமான பாதை என்பதால் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டுதான் கௌமுக் புறப்பட வேண்டும். கௌரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குண்டம் மற்றும் தேவ்காட்டிலிருந்து உயர்ந்து செல்லும் பாதை கடினமானது. வழியெங்கும் பனி படர்ந்திருக்கும். கடல் மட்டத்திலிருந்து 4255 மீட்டர் உயரத்தில் உள்ளது. கங்கோத்ரி சிகரத்தின் மையத்தில் இருக்கிறது. கௌமுகி நதியில் குளிக்கும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

தபோவனம்: கௌமுக் கடந்து மூன்று கிலோ மீட்டரில் மேரு-கங்கோத்ரி மலைகளுக்கிடையே தபோவனம் அமைந்திருக்கிறது. கண்ணுக்கினிய சமவெளிப்பகுதி. இதற்கு எதிரில் நந்தவனம் இருக்கிறது.

கங்கோத்ரியிலிருந்து கேதார்நாத்

உத்ரகாசி, தாராசு வழியாக தெஹ்ரி வந்துதான் செல்ல முடியும். தெஹ்ரியிலிருந்து கேதார்நாத்துக்கு இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று, கன்காலிச்சிர் பாத்ரி, தில்வாரா வழியாக கேதார்நாத் செல்லும் 183 கி.மீ. பாதை. மற்றொன்று ஸ்ரீநகர், ருத்ரபிரயாகை, தில்வாரா வழியாகச் செல்லும் 178 கி.மீ. பாதை. இரண்டு பாதைகளும் ரம்மியமான இயற்கைக் காட்சிகள் நிறைந்த பாதைகள்.

ரண்தீர் பதிப்பகம்
ரெயில்வே ரோடு
ஆர்த்தி ஹோட்டல் பின்புறம்
ஹரித்துவார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கங்கோத்ரி—கேதார்நாத் பாதை

புறப்படும் இடம்	செல்லும் இடம்	தொலைவு (கி.மீ.)	உயரம் (மீட்டர்)
கங்கோத்ரி	பைரோன்காடி	10	2,652
பைரான்காடி	லங்காசட்டி	3	2,652
லங்காசட்டி	ஹர்சில்	13	2,591
ஹர்சில்	கங்நானி	31	1,982
கங்நானி	பட்வாரி	14	1,677
பட்வாரி	உத்ரகாசி	29	1,158
உத்ரகாசி	தாராசு	28	1,036
தாராசு	தெஹ்ரி	37	770
தெஹ்ரி	தன்சாலி	65	976
தன்சாலி	சிர்வடியா	31	2,134
சிர்வடியா	தில்வாரா	42	671
தில்வாரா	அகஸ்தியமுனி	10	762
அகஸ்தியமுனி	குண்ட்	15	976
குண்ட்	குப்தகாசி	5	1,479
குப்தகாசி	நாலா	3	1,475
நாலா	ஃபடா	11	1,601
ஃபடா	ராம்பூர்	9	1,646
ராம்பூர்	சோன்பிரயாகை	3	1,829
சோன்பிரயாகை	கௌரிகுண்டம்	5	1,982
கௌரிகுண்டம்	ராம்பாரா (நடை)	7	2,591
ராம்பாரா	கருட்சட்டி (நடை)	4	3,262
கருட்சட்டி	கேதார்நாத் (நடை)	3	3,583

குறிப்பு: கங்கோத்ரி முதல் கௌரிகுண்டம் வரை 334 கி.மீ. வாகனப் பயணம்

கௌரிகுண்டம் முதல் கேதார்நாத் 14 கி.மீ. நடை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7

கேதார்நாத்

க்ஷேத்திர மகிமை

நரநாராயணர்கள் பத்ரிகாச்ரமத்தில் மண்ணால் ஆன லிங்கத்தை பூஜை செய்து தவம் புரிந்தார்கள். அவர்களின் தவத்தால் ஈர்க்கப்பட்ட சிவபெருமான் அவர்கள் முன்னே தோன்றி, கேட்கிற வரத்தைத் தருவதாக வாக்களித்தார். சிவபெருமான் அங்கேயே தங்கியிருந்து அருள் செய்ய வேண்டும் என்று வரம் கேட்டார்கள் நரநாராயணர்கள். அவ்வாறே ஜோதிர் லிங்கமாக கேதாரநாதர் அங்கேயே தங்கி விட்டார். சிவபுராணம் கூறும் கதை இது.

குருக்ஷேத்திர யுத்தத்திற்குப் பிறகு சாந்தத்தை வேண்ட பாண்டவர்கள் இங்கே வந்தனர். பாண்டவர்களைப் பார்த்த சிவன், எருமைக்கடா உருவெடுத்து அங்கிருந்து விரைந்தோடினார். சிவனைப் பிடிக்க பாண்டவர்கள் ஓடினர். சிவன் பூமிக்குள் மறைய ஆரம்பித்தார். எருமையின் பின் பாகம் கேதாரத்தில் தங்கிவிட, மற்ற நான்கு பாகங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்கு இடங்களில் தங்கின. மேற்கில் துங்கநாத்தில் புஜம், முகம் ருத்ரநாத்தில், வயிறு மத்யமேச்வரத்தில், ஜடை கல்பேச்வரத்தில் தங்கின. இந்த ஐந்து இடங்களும்தான் '**பஞ்சகேதாரம்**' என்று வழங்கப் படுகின்றன.

இதை **ஸுமேரு** அல்லது **பஞ்ச பர்வதம்** என்றும் அழைக்கிறார்கள். மகாபாரதப் போர் முடிந்த பின் பஞ்சபாண்டவர்கள் தங்கள் பாவத்திலிருந்து விடுபடும் நோக்கத்துடன் கட்டப்பட்ட கோயில் இது என்று கருதப்படுகிறது. யுதிஷ்டிரனைத் தவிர மற்ற நான்கு பாண்டவர்களும் இந்தக் கடைசி மலை யிலிருந்துதான் சுவர்க்கலோகம் புகுந்தார்கள்.

சிறப்புக்குரிய சிவத்தலம்

கேதார்நாத் கடல்மட்டத்திலிருந்து 3,583 மீட்டர் (11,735 அடி) உயரத்தில், இமயமலைச் சாரலில் அமைந் திருக்கிறது. 22,850 அடி உயர்முடைய **மஹாபந்த்** எனப்படும் பனிச்சிகரத்தின் கூடல் வாயிலில் இருக்கிறது. இங்குதான் சிவபெருமானின் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

கேதாரேச்வர லிங்கம் கருங்கல்லால் ஆனது. மலையின்மேலே கேதார்நாத்தின் தென்பகுதியில் பைரவர் கோயில் அமைந்திருக்கிறது. கேதார்நாத் கோயிலில் உள்ள சுவர்களில் செதுக்கப்பட்ட அழகிய சிற்பங்கள் கண்ணைக் கவர்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்ப்பக்கிரஹத்தின் அருகே மண்டபம் உள்ளது. மண்டபத்தில் ஒரு பெரிய நந்தியும் உண்டு. வெளியே பல சிலைகளும் சிறுசிறு கோயில்களும் உள்ளன. சிவபெருமானின் பனிரெண்டு ஜோதிர்லிங்கங்களில் ஒன்று இங்குள்ள சிவபிண்டா.

பத்ரிநாத் கோயிலைப் போலவே இந்தக் கோயிலும் ஏப்ரல் கடைசியில் திறக்கப்படுகிறது. தீபாவளி முடிந்ததும் மூடப்படுகிறது. அதாவது, சூரியன் வைசாகத்தில் மேஷ ராசியில் பிரவேசிக்கும் போது கோயில் திறக்கப்படுகிறது. விருச்சிக ராசியில் மறுபடி சூரியன் போகும்போது மூடப்படுகிறது. கோடையில்கூட இங்கே இரவு தங்குவது அவ்வளவு எளிதல்ல; குளிர்காலத்தில் கடும்பனி வீசும்.

காலையில் நிகழும் பூஜை, நிர்வாண தரிசனம்; மாலையில் சிங்கார தரிசனம். இது தவிர காலை வேளைகளில் பால்போக், மகா அபிஷேகம், ருத்ராபிஷேகம், அஷோடார்; மாலைவேளைகளில் சிவ அஷ்டோத்திரம், சிவசகஸ்ரநாமம், சிவ நாமாவளி, சிவமகிமை ஸ்தோத்திரங்கள் மற்றும் ஏகாந்த சேவை ஆகிய பூஜைகள் நடைபெறுகின்றன. பக்தர்கள் நெய்அபிஷேகம் செய்து லிங்கத்தைத் தழுவிக் கொள்கிறார்கள்.

இங்கே பூஜை செய்யும் பண்டாக்கள், சமஸ்கிருத பண்டிதர்கள். குப்தகாசி, ஊகிமட், மத்யமேச்வரம் ஆகிய ஊர்களில் தங்கியிருக்கிறார்கள். பனிக் காலத்தில் ஊகிமடத்தில் பூஜை நடக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்ச கேதார்

கேதார்நாத், துங்கநாத், ருத்ரநாத், மத்ய மஹேஷ்வர், கல்பேஷ்வர் ஆகிய இடங்களில் சிவபெருமானின் உடல், புஜம், முகம், வயிறு, ஜடை ஆகியவை தோன்றின.

கேதார்நாத்: பாண்டவர்களின் கண்களிலிருந்து மறைந்து வாரணாசியிலிருந்து ஒரு நந்தி உருவிலே இங்கு வந்து பாண்டவர்களுக்குத் தரிசனம் கொடுத்ததாக நம்பிக்கை.

துங்கநாத்: ஊகிமட்டிலிருந்து 30 கி.மீ. தொலைவிலும், சோப்டாவிலிருந்து 5 கி.மீ. தொலைவிலும் உள்ளது. 3,680 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இங்கிருந்து பக்தர்கள் கேதார்நாம், பஞ்சசூலி, நந்ததேவி, தூனகிரி, பந்தர்பூஞ்ச் ஆகிய இடங்களைக் காண முடியும்.

ருத்ரநாத்: கோபேஷ்வரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குதான் வைதாரிணி நதி பாய்கிறது. இந்த இடத்தில் உள்ள சிவன் நீலகண்டன் என்று அழைக்கப்படுகிறார்.

மத்யமஹேஷ்வர்: குப்தகாசியிலிருந்து முப்பது கி.மீ. தொலைவில் இருக்கிறது.

கல்பேஷ்வர்: ஜோஷிமட்டிலிருந்து 14 கி.மீ. தொலைவிலும் அலக்நந்தாவிலிருந்து 9 மீட்டர் தொலைவிலும் உள்ள இது ஒரு குகைக்கோயில்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷிகேசம்—கேதார்நாத் பாதை

புறப்படும் இடம்	செல்லும் இடம்	தொலைவு (கி.மீ.)	உயரம் (மீட்டர்)
ரிஷிகேசம்	தேவபிரயாகை	70	472
தேவபிரயாகை	ஸ்ரீநகர்	35	579
ஸ்ரீநகர்	ருத்ரபிரயாகை	34	610
ருத்ரபிரயாகை	தில்வாரா	9	671
தில்வாரா	அகஸ்தியமுனி	10	762
அகஸ்தியமுனி	குண்ட்சட்டி	15	976
குண்ட்சட்டி	குப்தகாசி	5	1,479
குப்தகாசி	நாராயணன்கோடி	3	1,485
நாராயணன்கோடி	ஃபடா	11	1,601
ஃபடா	ராம்பூர்	9	1,646
ராம்பூர்	சோன்பிரயாகை	3	1,829
சோன்பிரயாகை	கௌரிகுண்டம்	5	1,982
கௌரிகுண்டம்	ராம்பாரா (நடை)	7	2,591
ரம்பாரா	கருட்சட்டி (நடை)	4	3,262
கருட்சட்டி	கேதார் (நடை)	3	3,583

குறிப்பு: கேதார்நாத்திலிருந்து பத்ரிநாத்துக்கு ஊகிமட் வழியாகவும் செல்லலாம் (230 கி.மீ.) ரிஷிகேசத்திலிருந்து கேதார் செல்லும் பாதை முப்பது கி.மீ. தூரம் கங்கைக் கரையிலேயே செல்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேதார்நாத் பூஜை விவரங்கள்

	பூஜையின் பெயர்	கட்டணம்
1.	பிரதிகால பூஜை	11.00
2.	பால்போக்	21.00
3.	மஹாபிஷேகம்	301.00
4.	ருத்ராபிஷேகம்	151.00
5.	லகுருத்ராபிஷேகம்	101.00
6.	அஷ்டோபசார பூஜை	25.00
7.	பஞ்சோபராச பூஜை	11.00
8.	சாதாரண சிவபூஜை	5.00
9.	சம்பூரண தின பூஜை	501.00
10.	சம்பூரண ஆரத்தி	51.00
11.	பாண்டவ் பூஜை	5.00
12.	கணேச பூஜை	5.00
13.	பைரவ பூஜை	5.00
14.	பார்வதி பூஜை	5.00

சாயங்கால பூஜைகள்

1.	சிவ அஷ்டோத்ரம்	8.00
2.	சிவ சகஸ்ரநாமம்	15.00
3.	சிவ நாமாவளி	25.00
4.	சிவ மகிமை ஸ்தோத்திரம்	25.00
5.	அபராத் சமர்ப்பண ஸ்தோத்திரம்	21.00
6.	ஏகாந்த சேவை	15.00
7.	சிவதாண்டவ ஸ்தோத்திரம்	21.00

குறிப்பு: பூஜை செய்வதற்கு முன்பாக கோயில் நிர்வாக அலுவலகத்திலிருந்து சிறப்புப் பூஜை கட்டண விவரங்களை அவசியம் அறிந்து கொள்ளவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்க்க வேண்டிய இடங்கள்

தேவப் பிரயாகை: உத்தராக்கண்ட் யாத்திரையில் மிகவும் ஒரு முக்கியமான இடம். சடோபந்திலிருந்து அலக்நந்தாவும், கௌமுகியிலிருந்து பாகீரதியும் இந்த இடத்தில் சங்கமமாகி புனித கங்கையாகிறது. இந்த இடத்தில்தான் ஸ்ரீ ரகுநாத் கோவில் இருக்கிறது. தேவப்பிரயாகையில் பிண்டஸ்ரார்த்தம் செய்வது இந்துக்களின் வழக்கம். அலக்நந்தா கரையோரமாக உள்ள பாதையில் பகவான், மலேதா, கீர்த்திநகர் வழியாகச் சென்று 35 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீநகரை அடையலாம். கங்கையின் வலது கரையில் உள்ள பாதை வாகனங்கள் செல்லவும், இடதுபுறம் உள்ள பாதை பாதசாரிகள் செல்லவும் ஏற்றவை. ரிஷிகேசம், குலார்சட்டி, சேமல்சட்டி, பியாஸ்காட், உம்ராசு என்ற இடங்களின் வழியாக ஹரித் துவாரிலிருந்து தேவப்பிரயாகை 94 கி.மீ. தூரம்.

ஸ்ரீநகர்: மகாராஜா அஜய்பால் என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட இந்த நகரம் தேஹ்ரி கர்வாலின் தலைநகராக 1,803 வரை இருந்தது. அலக்நந்தாவின் கரையில்தான் கமலேஷ்வர் மகாதேவ் குடி கொண்டிருக்கும் சிவன் ஆலயம் அமைந்திருக்கிறது. அலக்நந்தாவிலிருந்து 29 கி.மீ. தூரத்தில் உள்ள பௌடியும் 137 கி.மீ. தூரத்தில் கோட்துவாராவும் உள்ளன.

ருத்ரபிரயாகை: கேதாரநாத், மத்யமஹேஷ்வர், மஹாதேவ், காளிமத் என்ற இடங்களுக்குச் செல்லும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாத்ரிகர்களுக்கு இந்த ருத்ரபிரயாகையே, சாமான்கள் வாங்கக்கூடிய சிறிய ஆனால் முக்கியமான இடம்.

தில்வாரா: தெஹ்றியிலிருந்து வரும் பாதை ரிஷிகேசத்திலிருந்து கேதார்நாத் செல்லும் பாதையை சந்திக்கும் இடத்தில் உள்ள தில்வாரா ருத்ர பிரயாகையிலிருந்து ஒன்பது கி.மீ. தொலைவில் உள்ளது. கேதார்நாத்துக்கு மலைக்குகை வழியாகச் செல்லும் பாதை மந்தாகினி நதியின் ஓரமாகஉள்ளது.

அகஸ்திய முனி: தில்வாராவிலிருந்து பத்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இடத்தில் அகஸ்திய மாமுனிவர் தவம் செய்ததாக நம்பப்படுகிறது.

குப்தகாசி: ஊகிமட் என்னும் கிராமம் இந்த குப்தகாசிக்கு எதிரே உள்ள மலைகளின் மடியில் இருக்கிறது. மணிகார்னிகா என்னும் சிறிய நீரூற்று இங்கே உள்ளது. கௌரிகுண்டத்திற்குச் செல்லும் வாயில் இது. யாத்ரிகர்கள் இந்த வாயிலில் உள்ள காவல்துறை சாவடியில் செல்லும் நேரத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அருகில் உள்ள அர்த்த நாரீஸ்வரர் கோயில், சந்திரசேகர மகாதேவர் கோயில் இரண்டும் பழைமையானவை.

நாராயணன்கோடி (நளா): துர்க்கையை லலிதா தேவியின் வடிவில் வழிபடும் சிறிய ஊர். புத்தர் சிலையும் இங்கு உள்ளது.

சோன் பிரயாகை: கேதார்நாத், புஸாகி ஆகிய ஏரிகளிலிருந்து வரும் மந்தாகினி, சோன்கங்கா நதிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரையில் உள்ள சிறிய கிராமம். யாத்திரைக் காலங்களில் மலை மேம்பாட்டுக் கழகம் கூடாரங்கள் அமைத்து, பயணிகளுக்காக தண்ணீர், மின்சாரம் மற்றும் தங்கும் வசதிகளை செய்து தருகின்றது.

கௌரிகுண்டம்: இங்கே உள்ள மாதா கௌரி கோயில் பிரசித்தி பெற்றது. இரண்டு வெந்நீர் ஊற்றுகளும், நன்னீர் ஊற்றுகளும் உள்ளன. இங்கிருந்து நடைப்பயணம் துவங்குகிறது.

கேதார்: ராம் பாரா, கருட்சட்டி வழியாக நடந்து செல்லும்போது பசுமையான காடுகளும் அருவிகளும் காணலாம். கருட்சட்டியிலிருந்து கேதார் உச்சி நன்றாகத் தெரியும். இங்கே உள்ள மலையிலிருந்து தூதகங்கா ஆறு வருகிறது. சிற்றாறுகளும் நீரோடை களும் சேர்ந்து மந்தாகினி நதியாக பெருக்கெடுத்து ஓடுகிறது.

ஊகிமட்: ருத்ரபிரயாகை வழியாகச் செல்லும் பாதையைப் போல ஊகிமட் வழியாகச் செல்லும் பாதை அவ்வளவு புகழ்பெற்றதல்ல. காரணம் சோப்டாவிற்கு ஏறுவது கடினம். ஊகிமட்டில்தான் பனிக்காலங்களில் பூஜாரிகள் தங்கியிருப்பார்கள். இங்கு சிவன், பார்வதி கோயில்கள் உள்ளன.

தோகால் பிட்டா என்ற இடம் ஊகிமட்டிலிருந்து 24 கிமீ. தொலைவில உள்ளது. இங்கு வனத்துறையின் தங்கும் விடுதி உள்ளது. பக்கத்தில் இருக்கிறது சோப்டா. சோப்டாவிலிருந்து இமாலயத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உச்சியைப் பார்க்கலாம். இதன் அருகில் மந்தால்சட்டி பள்ளத்தாக்கு இருக்கிறது.

கேப்பேஷ்வர்: சமோலி மாவட்டத்தின் தலைநகர். இங்குள்ள சிவன்கோயில் பிரசித்தி பெற்றது.

கர்வால் மலைகளின் பெயர்கள்

இடம்	உயரம்	மலையின் பெயர்
திரியூகி நாராயண	6,000	காமெட்
கௌரிகுண்டம்	6,500	மானா
அனுசுயாதேவி	6,500	தூனகிரி
ஹனுமான்சட்டி	8,000	பான்சூலி
சந்தரிவதனி	8,000	சாங்பாங்
ராம்பாரா	9,000	மானா
பத்ரிநாத்	10,350	
மத்யமகேச்வர்	11,474	சௌகாம்பா
கேதார்நாத்	11,750	நந்தாதேவி
துங்கநாத்	12,070	திரிசூலி
ரூபகுண்ட்	16,000	சாங்பாங்

கேதார குண்டத்தில் நீராடி, பிதிர்க்கடன் கழித்து, சிவன்-உமையை வழிபட்டு, குண்டத்தின் நீரை மூன்று முறை வலதுகையில் எடுத்து மூடிக்கொண்டு தம்மை நந்தி பகவானாக நினைத்து அருந்த வேண்டும். கேதாரநாத்தை தரிசிக்காத பத்ரி தரிசனத்தில் பயனில்லை என்கிறது கேதார காண்டம். கேதாரநாதரின் தரிசனம் முடித்து, இனி பத்ரிநாத் பயணம் செல்வோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8

பத்ரிநாத்

ஷேத்திர மகிமை

வசிஷ்ட முனிவரின் மனைவி அருந்ததி கணவனிடம் கேட்டாள்: "ஹே பிரபுவே, ஸ்ரீ பத்ரி நாதருடைய முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுங்கள். பத்ரியை தூய உள்ளத்துடன் தரிசித்தால் கிடைக்கிற நன்மைகள் என்ன?" மனைவியின் கேள்விக்கு வசிஷ்டர் பதிலளித்தார்.

"பத்ரிநாத்தை தரிசிப்பவன் எவனும், அவன் எப்படிப்பட்ட பாவியாயினும், பக்தியினால் புனிதமடைந்து மோக்ஷமும் அடைகிறான். பத்ரி நாதரின் தரிசனம் கிடைப்பது அவ்வளவு எளிதல்ல. எவனொருவன் வாழ்நாள் முழுவதும் இறைவனைப் பிரார்த்தனை செய்கிறானோ, அவனுக்குத்தான் பத்ரி நாதர் காட்சி தருகிறார். அவனுடைய பாவங்கள் நீங்கும். உள்ளம் தூய்மை பெறும். எல்லா குற்றங் களையும் புரிந்தவனும், வேறெந்த க்ஷேத்திரத்திலும் அவனுடைய பாவங்களிலிருந்து விடுபட வழியின்றிப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போனவனும்கூட பத்ரிநாதரின் கருணையினால் சுவர்க்கலோகத்தை அடைகிறான்.

எவன் கங்கையில் நீராடி, உடைகளையும் ஆபரணங்களையும் பத்ரிநாதருக்கு சமர்ப்பிக்கிறானோ அவனுக்கு மோட்ச லோகத்தில் நிச்சயம் இடம் கிடைக்கும். எவன் அகண்டதீபம் ஏற்றுகிறானோ அவன் சிரேஷ்டனாகிறான். எவன் பத்ரிநாதரின் கோயிலை வலம் வருகிறானோ, கடவுளின் பாதார விந்தத்தைப் பற்றிக்கொண்டு பிரார்த்தனை செய்கிறானோ அவனை பத்ரிநாதரே 'நீ ஒரு அஸ்வமேத யாகம் செய்த பயனை 'அடைகிறாய்' என்று வாழ்த்துகிறார்."

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பத்ரிநாத் என்ற தலத்தைப் பற்றிய விவரங்களைப் பார்ப்போம்.

இமாலயத்தின் சாரலிலே அமைந்துள்ள பத்ரி நாதன் க்ஷேத்திரம் காலங்காலமாகவே ரிஷிகளையும் யோகிகளையும் ஈர்த்து வந்துள்ளது. கடல்மட்டத்திற்கு 3100 மீட்டர் உயரத்தில், சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத இயற்கைச்சூழலில், 400 அடி உயர **வஸுதரா** என்ற அருவியிலிருந்து இறங்கி வரும் **அலக்நந்தா** ஆறு அருகில் சலசலத்து ஓடிக் கொண்டிருக்கிறது. **சரஸ்வதி தௌலி, மந்தாகினி, பிண்டார்** முதலிய துணை நதிகள் இங்கே உற்பத்தியாகின்றன. இலந்தை மரங்கள் அடர்ந்த வனம் **பத்ரி வனம்** எனப்படுகிறது. பத்ரி என்றால் சமஸ்கிருதத்தில் இலந்தை என்று பொருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பத்ரிநாதர் ஆலயம்

தபம் செய்யும் பத்ரியைத் தரிசிக்காமல் முக்தி அடைய முடியாது என்று நம்புகிறார்கள். ஆதி ரிக் வேதத்தின் சில கவிதைகள் இங்குதான் எழுதப்பட்ட தாக நம்பப்படுகிறது. நந்த பிரயாகையிலிருந்து ஸாதோ பந்த் வரை உள்ள க்ஷேத்திரத்திற்கு **பத்ரி விஷால்** என்று பெயர்.

கடும் பனிக்காலம் முடிந்தபிறகு ஒவ்வொரு ஆண்டும் கோயில் அதிகாரி, சோதிடர்களையும் பண்டிதர்களையும் கலந்தாலோசித்த பிறகு கோயில் திறக்கப்படும் தேதியை அறிவிக்கிறார். பொதுவாக ஏப்ரல் இறுதி அல்லது மே முதல் வாரம் திறக்கப்படும். அதேபோல, பனிக்காலம் துவங்கும் முன் கோயிலை மூடுவதற்கும் இதே முறை அனுசரிக்கப்படுகிறது. பொதுவாக நவம்பர் இரண்டாவது வாரத்தில் கோயில் மூடப்படுகிறது. மே முதல் நவம்பர் வரை முக்கிய தரிசனங்கள் — ஜோதி தரிசனம் (முதல் நாள்), வாமனத்வாதசி, ஜன்மாஷ்டமி, ராம்நவமி, ஏகாதசி ஆகியவை.

கோயிலை மூடுவதற்கான சம்பிரதாயங்கள் முடிவடைந்த பிறகு தலைமைப்பூஜாரி மற்ற ஊழியர்களுடன் பத்ரியிலிருந்து இறங்கி ஜோஷி மடத்திற்குச் சென்று விடுவார். மீண்டும் கோயில் திறக்கப்படும் வரை அங்குதான் தங்கியிருப்பார். தலைமுறை தலைமுறையாக நில்வி வரும் வழக்கம் இது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலை 5 மணிக்கு கோயில் திறக்கப்படுகிறது. காலை 6.30 மணி முதல் பகல் 1 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையும் பக்தர்களுக்கு தரிசனம் கிடைக்கிறது. பனிக்காலத்தில் ஏற்றிய நந்தா விளக்கைத் தரிசிக்க ஏராளமான கூட்டம் கூடுகிறது.

இங்குள்ள `பத்ரிநாதர் . வைஷ்ணவர்களுக்கு வைகுண்ட நாதன், சைவர்களுக்கு பஞ்சமுகி சிவன், சாக்தர்களுக்கு காளி, பௌத்தர்களுக்கு சாக்கிய முனி, ஜைனருக்கு நிர்வாணத் தீர்த்தக்காரர். பக்தர் இந்த இறைவனை எந்த வடிவிலே - விஷ்ணு, மகேசன், ஹனுமான், காளி என எந்த வடிவிலே மனக் கண்ணால் வழிபடுகிறார்களோ அந்த வடிவில் அவர்களுக்குக் காட்சி தருகிறார் என்று நம்பிக்கை.

பத்ரீசர் ஆலயம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வாயிலில் உள்ள பத்து தூண்கள் விஷ்ணுவின் பத்து அவதாரங்களைக் குறிக்கின்றன. கருடன் உள்ளே வீற்றிருக்கிறார். அருகே கணேசரும் ஹனுமானும்கூட இருக்கிறார்கள். கண்டா கர்ணனுக்கும் லட்சுமிக்கும் தனி சன்னிதிகள் உள்ளன. கருவறையின் அருகே தர்மசிலா என்ற உண்டியலும் ஹோமகுண்டமும் உள்ளன. கருவறையில் வீற்றிருக்கிறார் பத்ரிநாதர்.

கோயில் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவது மூலஸ்தானம். கர்ப்பக்கிரஹத்தின் விமானம் பொன்னால் வேயப்பட்டது. அடுத்த பகுதி, தரிசன மண்டபம். இங்கேதான் பூஜைகளும் இதர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சடங்குகளும் நடை பெறுகின்றன. மூன்றாவது சபா மண்டபம். இங்குதான் பக்தர்களுக்கு தரிசனம் கிட்டுகிறது. பக்தர்கள் தப்த குண்டத்தில் நீராடி விட்டு பூஜைகளில் கலந்து கொள்கிறார்கள்.

பத்ரிநாதர் ஆலயம் எப்போது நிறுவப்பட்டது என்பதற்கு வரலாற்றுபூர்வமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. நாரத குண்டத்தில் முழுகின சங்கரர் கையில் ஒரு சாளக்ராமம் தட்டுப்பட்டதாம். அதை தப்த குண்டத்துக்கும் கருட சிலைக்கும் அருகே பிரதிஷ்டை செய்தார். 5ஆம் நூற்றாண்டில் குஷ்ட நோயால் அவதிப்பட்ட கர்வால் மகாராஜா, வரத ராஜ ஆச்சார்யார் என்ற குருவின் யோசனைப்படி இந்த மூர்த்தியை தற்போது உள்ள இடத்தில் நிறுவினாராம். அதன் பயனால் அவரது நோய் நீங்கியதாம்.

இங்கே உள்ள பத்ரிநாதர் பத்மாஸனத்தில் இருக்கிறார். அதனால் புத்தரை நினைவுபடுத்துகிறார். பௌத்தர்கள் இதை புத்த விஹாரம் என்றே நம்புகின்றனர். இன்றும் பௌத்த யாத்திரிகர்களை இங்கே காணலாம்.

கறுப்புநிற சாளக்ராமத்தில் உள்ள பத்ரிநாதருக்கு பால், தேன் அபிஷேகங்களும், மஹாபோக் என்ற நிவேதனமும் கண்டபின் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது. மாலை 4 மணிக்கு சிங்கார தரிசனம். விஷ்ணு சகஸ்ரநாமமும் கீதகோவிந்தமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முழங்க மலையாள நம்பூதிரி பூஜாரி பூஜை செய்கிறார். பூஜாரிக்கு 'ராவல்' என்று பெயர். இன்று நேற்றல்ல, ஆதிசங்கரர் ஏற்பாடு செய்த காலத்திலிருந்து பத்ரி நாதருக்கு பூஜை செய்யும் உரிமை கேரளத்தின் நம்பூதிரிகளுக்குத்தான். இவர்களை பத்ரிநாதர் கோயில் கமிட்டியினரும் தெஹ்ரி கர்வால் மகா ராஜாக்களும் நியமிக்கிறார்கள்.

பஞ்ச பத்ரி (ஐந்து பத்ரி)

பத்ரிநாதரை விஷால் பத்ரி, யோகபத்ரி, பவிஷ்ய பத்ரி, விருத்த பத்ரி, ஆதி பத்ரி என்ற பெயர்களில் ஐந்து இடங்களில் தரிசிக்கலாம்.

விஷால் பத்ரி: பத்ரிவிஷால் எனப்படுகிற இதுதான் பத்ரிநாதரின் பிரதானத் தலமாகும். பூஜை நடைபெறும்போது பக்தர்கள் 'ஜெய் பத்ரி விஷால்கி' என்று கோஷம் எழுப்புகிறார்கள்.

யோகபத்ரி: பத்ரிநாத்திலிருந்து 24 கி.மீ. தொலை விலும், ஜோஷிமட்டிலிருந்து 20 கி.மீ. தொலைவிலும் உள்ளது. பாண்டு மகாராஜா பாண்டுகேஷ்வரரைக் குறித்து தியானம் செய்ததால், அது முதல் இந்த இடம் 'யோகதியான் பத்ரி' என்று பெயர் பெற்றது.

பவிஷ்ய பத்ரி: ஜோஷி மட்டிலிருந்து 17 கி.மீ. தொலைவில், 2744 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய ஊர் இது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருத்த பத்ரி (ப்ரித பத்ரி): பீப்பல் கோட் போகும் வழியில் அமைந்துள்ள இது ஜோஷி மட்டிலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆதிசங்கரர் இதை வழிபட்டு வந்திருந்ததாக நம்பப்படுகிறது.

ஆதிபத்ரி: கர்ண பிரயாகையிலிருந்து 16 கி.மீ. தொலைவில், ராணி கேத் பாதையில் அமைந்து இருக்கிறது. இங்கே குப்தர்கள் கால கோயில்கள் பல உள்ளன. இங்கே உள்ள நாராயணன் கோயில் மிகப் பிரசித்தமானது.

பார்க்க வேண்டிய இடங்கள்

தேவபிரயாகை: அலக்நந்தாவும், பாகீரதி நதியும் சங்கமமாகி கங்கையாக மாறும் இடத்தில் உள்ளது.

ஸ்ரீநகர்: தெஹ்ரிகர்வாலின் தலைநகராக விளங்கிய ஊர். கமலேஷ்வர் மகாதேவரின் கோயில் பிரசித்தி பெற்றது. வளர்ச்சி பெற்ற நகரம்.

ருத்ரபிரயாகை: அலக்நந்தாவும் மந்தாகினி நதியும் இங்குதான் சங்கமமாகின்றன. நாரத மாமுனிவர் இங்குதான் பல ஆண்டுகள் தவம் செய்ததாகக் கூறப்படுகிறது. ருத்ரநாத்ஜி மந்திர், ஜகதாம்பாதேவி மந்திர் ஆகிய இரண்டு கோயில்கள் புகழ்பெற்றவை.

கர்ணபிரயாகை: உமாதேவியின் கோயில் அலக் நந்தாவின் முகப்பிலே அமைந்துள்ளது. கோடைகால விடுமுறையைக் கழிக்க உசிதமான இடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பத்ரிநாதருக்கு ஆரத்தி எடுக்கும்போது பாடும் பாடலின் சுருக்கம்

உலகனைத்தையும் காக்கும் சர்வசக்தி படைத்த இறைவா, பத்ரி நாராயணா, புனித கங்கைக்கு அருகில் இருக்கும் பனிபடர்ந்த கோயிலில் இருந்து கொண்டு காட்சி தருகிறீர். குளிர்ந்த காற்றடிக்கும் இந்தப் பர்வதப்பிரதேசத்தின்மேல் அமர்ந்திருந்து பக்தர்களுக்கு தரிசனம் தருகிறீர். எம்பெருமான் சிவனும் தவக்கோலத்தில் உம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சிருஷ்டிகர்த்தாவான பிரம்மா வேதங்களை ஒலித்து உன் பெருமை பாடுகிறார். சக்தியும், கௌரிகணேசரும், நாரத முனிவரும் உன்னைத் துதி பாடுகிறார்கள்.

எம்பெருமான் பத்ரிநாதரின் புகழை இவர்கள் பாடிக்கொண்டே இருப்பார்கள். மழையின் தெய்வமான இந்திரன், செல்வத்திற்கதிபதியான குபேரன், சூரியன், சந்திரன், முனிவர்கள், ரிஷிகள் பத்ரிநாதரின் வெற்றியைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

கவிகளும் பாடகர்களும் கலைஞர்களும் யட்சர்களும் உன் பெருமையைப் பாடுகிறார்கள். கந்தவர்கள் கூட உன் பெருமையைப் பாடுகிறார்கள். பத்ரி நாராயணன் தலையில் விஷ்ணுபத்தினியான லட்சுமி கமலா வீற்றிருக்கிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹரித்துவார்—பத்ரிநாத் பாதை

புறப்படும் இடம்	செல்லும் இடம்	தொலைவு (கி.மீ.)	உயரம் (மீட்டர்)
ஹரித்துவார்	ரிஷிகேசம்	24	340
ரிஷிகேசம்	தேவபிரயாகை	70	472
தேவபிரயாகை	ஸ்ரீநகர்	35	579
ஸ்ரீநகர்	ருத்ரபிரயாகை	34	610
ருத்ரபிரயாகை	கோல்டிர்	34	645
கோல்டிர்	கௌச்சார்	10	790
கௌச்சார்	கர்ணபிரயாகை	11	795
கர்ணபிரயாகை	நந்தபிரயாகை	22	914
நந்தபிரயாகை	சமோலி	10	1,069
சமோலி	பிராஹி	8	1,100
பிராஹி	பீபல்கோடி	9	1,311
பீபல்கோடி	கருட்கங்கா	5	1,372
கருட்கங்கா	தங்கானி	6	1,677
தங்கானி	ஹெலாங்	6	1,524
ஹெலாங்	ஜோஷிமட்	14	1,850
ஜோஷிமட்	விஷ்ணுபிரயாகை	10	1,372
விஷ்ணுபிரயாகை	கோவிந்த்காட்	10	1,829
கோவிந்த்காட்	பாண்டுகேஷ்வர்	4	1,829
பாண்டுகேஷ்வர்	ஹனுமான்சட்டி	9	2,286
ஹனுமான்சட்டி	தேவ்தர்ஷனி	13	3,101
தேவ்தர்ஷனி	பத்ரிநாத்	2	3,110

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நந்த பிரயாகை: நந்ததேவி சிகரத்திலிருந்து உற்பத்தி ஆகும் நதி நந்தாகினி. அலக்நந்தாவும் நந்தாகினியும் சங்கமமாகும் இடத்தைச் சுற்றி இந்த இடம் அமைந்து இருக்கிறது.

பீபல்கோடி: பசிய மரங்களைக் கொண்ட மலையின் மடியில் பச்சைப் பாய்விரித்தாற் போன்ற சமவெளி வயல்களின் நடுவில் அமைந்துள்ள அழகான ஊர்.

கருட்கங்கா: கருடவாகனத்தில் பத்ரிநாதர் பத்ரிவனத்திற்குச் செல்லும்போது வழியில் கருடனை இறக்கிவிட்டுச் சென்ற இடம் என்பதால் 'கருட் கங்கா' ஆனது.

தங்கானி: இந்த ஊரில் நாரினால் பின்னப்பட்ட கூடைகள் கைவினைக் கலைஞர்களால் உருவாக்கப் படுகின்றன. விலைமலிவாகக் கிடைக்கும்.

ஹெலாங்: இங்கிருந்து ஒன்பது கி.மீ. தொலைவில் பஞ்சகேதார்களில் ஒன்றான கல்பேஷ்வர் கோயில் உள்ளது.

ஜோஷிமட்: ஆதிசங்கரர் நிறுவிய மடங்களில் ஒன்றான இந்த மடம் மிகவும் புகழ்பெற்றது. இங்குள்ள கல்பவிருட்சம் 2,400 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என்று கருதப்படுகிறது. நரசிம்மர், துர்க்கை கோயில்கள் முக்கியமானவை. இங்கிருந்து 11 கி.மீ. தொலைவில் தபோவனம் என்ற பள்ளத்தாக்கில் பவிஷ்ய பத்ரி இருக்கிறது. குளிர்காலத்தில் பத்ரிநாதர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோயிலை மூடிவிடுவதால் ஜோஷிமட்டில் உள்ள நரசிம்மர் கோயிலில் பத்ரிநாராயணனை வழிபடுகிறார்கள்.

விஷ்ணுபிரயாகை: நீதி பள்ளத்தாக்கிலிருந்து உற்பத்தியாகி வருகிற தௌலி கங்காவும் அலக் நந்தாவும் சங்கமாகிற இடம்.

கோவிந்த்காட்: இங்கிருந்து பதினைந்து கி.மீ. வளைந்து நெளிந்து செல்லும் பாலமானது கோவிந்த் அணைக்குச் செல்கிறது. ஹேமகுண்டம், மலர்ப் பள்ளத்தாக்குச் செல்வதற்கும் இங்கிருந்துதான் பாதை ஆரம்பமாகிறது.

பாண்டுகேஷ்வர்: பாண்டு மகாராஜா இறுதிக் காலத்தில் இங்கே வசித்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கே யோகதியானத்தில் பத்ரிநாதர் காட்சி தருவதாக நம்பிக்கை.

ஹனுமான்சட்டி: அனுமார் இங்கே நிஷ்டையில் அமர்ந்து பத்ரிநாதரை எண்ணி தவம் செய்தார் என்று நம்பிக்கை. ஹனுமானுக்கு சிறியதொரு கோயில் உள்ளது. பாண்டவர்களும் அனுமானுக்காக இங்கே பூஜை செய்ததாகவும், ஹனுமான் அவர்களுக்குக் காட்சி தந்ததாகவும் கூறப்படுகிறது.

தேவ்தர்ஷன்: பத்ரிவனம் இங்கிருந்து துவங்குகிறது. இங்கிருந்து பார்த்தால் பள்ளத்தாக்கில் பத்ரிநாத் தெரியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தப்தகுண்டம், நாரதகுண்டம்: கருடஷிலாவில் இருந்து உற்பத்தியாகும் ஒரு வெந்நீர் ஊற்று இங்கே ஒரு குளத்தை அடைகிறது. பத்ரிநாதரை தரிசிக்கும் யாத்ரிகர்கள் முதலில் தப்தகுண்டத்திலும் நாரத குண்டத்திலும் நீராடி விட்டுத்தான் தரிசிப்பர். தப்தகுண்டத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள நாரத ஷிலா, கருடஷிலா, மார்க்கண்ட ஷிலா ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவை.

பிரகலாத தாரா, கூர்ம தாரா, ஊர்வசி தாரா, பிருகு தாரா, இந்திர தாரா ஆகிய ஐந்து அருவிகள் பஞ்ச தாராக்கள் எனப்படுகின்றன. இவை பத்ரிநாத் புரியில் உள்ளன. சிரார்த்தம் செய்யும் பக்தர்களுக்கு அலக்நந்தாவின் கரையில் உள்ள பிரம்ம கபாலம் முக்கியத்துவம் வாய்ந்தது.

பாம்னி: ஊர்வசிக்காக ஒரு கோயில் இருக்கிறது. விஷ்ணுவின் பாத வடிவில் அமைந்த ஒரு பாறை தான் சரணபாதுகா. இங்கிருந்து பத்ரிநாத் இரண்டு கி.மீ. தொலைவு.

மானா: இந்த சிறிய கிராமத்தின் எதிரே அலக்நந்தா பள்ளத்தாக்கில் மாதாமூர்த்தி கோயில் இருக்கிறது. வியாச குகை, கணேச குகை, பீமகுகை என பல குகைகள் இந்தக் கிராமத்தில் உள்ளன.

கேசவ பிரயாகை: மானாவிற்கு வடக்கே மூன்று கி.மீ. தூரத்திலிருந்து சரஸ்வதி பிரவேசிக்கிறது. அலக்நந்தாவும் சரஸ்வதியும் சங்கமம் ஆகுமிடம் கேசவ பிரயாகை என அழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வசுதாரா: பத்ரிநாத்புரியிலிருந்து 8 கி.மீ. தொலைவில், மானாவிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள அருவி. 122 மீட்டர் உயரத்திலிருந்து விழும் அழகிய காட்சி. அருகே நான்கு கி.மீ. தொலைவில் லட்சுமிவனம் இருக்கிறது. இதில் லட்சுமி தவம் செய்ததாக நம்பப்படுகிறது.

சடோபநாத் ஏரி: பத்ரிநாத்திலிருந்து 25 கி.மீ. தொலைவில், 4400 மீட்டர் உயரத்தில் அமைந்திருக் கிறது. வசுதாரா அருவியிலிருந்து சடோபநாத் ஏரிக்குச் செல்லலாம்.

அருகே சோன்குண்ட், விஷ்ணுகுண்ட், சூரிய குண்ட் என்னும் சிறிய குளங்கள் உள்ளன. ஸ்வர்க ரோஹன் சிகரம் பனிச்சிகரமாகும். சுமார் 6,000 மீட்டர் உயரத்தில் உள்ள பால்கன் சிகரத்தின் அடிவாரத்தில் அமைந்திருக்கிறது அலகாபுரி பளிங்குப் பாறைகள். நாராயண பர்வதம், அலகாபுரி-கௌமுக் பளிங்குப்பாறை மண்டலங்களைப் பிரிக்கிறது.

முதுகுபற்றி கைத்தலத்தால் முன்னொரு கோலூன்றி
விதிர்விதிர்த்து கண்சுழன்று மேற்இது என்னப்பர்
மூத்தவாவென்று
இளையவரேசர் முன் மதுவுண் வண்டு
பண்கள் பாடும் பத்ரி

என்று திருமங்கையாழ்வார் பாசுரம் பாடிய பத்ரிநாத் யாத்திரை முடிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9

மலர்ப்பள்ளத்தாக்கு

பிராஸ் ஸ்மித் என்பவரால் எழுபது ஆண்டு களுக்கு முன்பு கண்டறியப்பட்டது. கண்ணைக் கவரும் மலர்கள் நிறைந்த பள்ளத்தாக்கு என்பதால் இந்தப் பெயர் பெற்றது.

ஹரித்துவாரிலிருந்து கோவிந்தகாட் செல்வது குறித்து முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. கோவிந்த காட்டிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ளது இந்த மலர்ப்பள்ளத்தாக்கு. ஐந்து கி.மீ. நீளமும் இரண்டு கி.மீ. அகலமும் கொண்டது. புஷ்பவதி என்ற சிற்றாறு இந்தப் பள்ளத்தாக்கைப் பிரிக்கிறது. பின்னர் இந்த புஷ்பவதி லட்சுமண்கங்காவில் கலந்து விடுகிறது.

கோவிந்தகாட்டிலிருந்து புய்னா என்ற இடத்திற்கு பேருந்தில் செல்லலாம். அங்கிருந்து பையூந்தர், கங்காரியா வழியாக 16 கி.மீ. நடந்து செல்ல வேண்டும். 3658 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இப்பள்ளத்தாக்கில் ஆர்க்கிட் என அழைக்கப்படும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்ணப்பகட்டு மலர்கள் ஏராளமாக உள்ளன. போகின்ற வழியெங்கும் கண்ணைக்கவரும் அழகு.

கோவிந்த்காட், புய்னா, கங்காரியா ஆகிய இடங்களில் யாத்ரிகர்கள் தங்குவதற்கான வசதி உண்டு. இந்த ஊர்களில் சீக்கிய குருத்வாராக்கள் உள்ளன.

ஜூலை மத்தியிலிருந்து ஆகஸ்ட் மத்தி வரை மலர்ப்பள்ளத்தாக்கு செல்வதற்கு உகந்த காலம். மே, ஜூன் மாதங்களில் பூக்கள் துளிர்த்து மலரும். செப்டம்பர் மாதத்தில் வாடி உதிர்ந்து விடும்.

சைப்ரிபிடியம் இமாலேசியம், துனியா ஆல்பா, யூலோப்பியா ஹெர்பேசியா, ரானன்குலஸ், ப்ரிமுலாஸ், டென்ரோபியம் பிரைமுலினம் என இலத்தீன் பெயர்களைக் கொண்ட ஆர்க்கிட்கள் தாவரவியல் துறையினரின் ஆய்வுக்குரியவை. இந்த தாவர இனம், அவற்றைக் கண்டுபிடித்தவர்களின் பெயர்கள், அவர்கள் வைக்க விரும்பிய பெயர் ஆகியவற்றின் பெயரில் ஆர்க்கிட்களின் பெயர்கள் வைக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10

ஸ்ரீஹேமகுண்ட் சாஹிப்

குருகோவிந்த்சிங் ஏரி

கடல்மட்டத்திலிருந்து 4,329 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது ஹேமகுண்ட் ஏரி. அதைச் சுற்றிலும் ஏழு பனிச்சிகரங்கள் உள்ளன. பனிச்சிகரங்களின் பிம்பம் ஏரியில் பிரதிபலிக்கும் காட்சி அற்புதமானது.

இந்த ஏரிக்கரையில்தான் குரு கோவிந்த்சிங் தியானம் செய்தார் என்று சீக்கியர்களின் புனித நூலான கிரந்த சாகிப்பில் கூறப்பட்டுள்ளது. 1930இல் ஹவில்தார் சோகன்சிங் என்பவர் இதைக் கண்டு பிடித்து, சீக்கியர்களுக்கும் இந்துக்களும் புனிதமான இடம் என்று அறிவித்தார்.

ஏற்கெனவே கூறியது போல ரிஷிகேசத்திலிருந்து கோவிந்த்காட் வந்தடைய வேண்டும். அங்கிருந்து பூல்நா, பையந்தர் கங்காரியா வழியாக ஹேமகுண்ட் செல்ல வேண்டும். நடந்து செல்வதற்குப் பதிலாக மட்டக் குதிரைகளும் கிடைக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கங்காரியாவிலிருந்து ஒரு பாதை ஹேமகுண்ட் ஏரிக்கும் ஒரு பாதை மலர்ப்பள்ளத்தாக்குக்கும் செல்கிறது. ஹேமகுண்ட் என்ற பெயருக்கும் நல்ல பொருள் இருக்கிறது. 'ஹேம' என்றால் பனி. குண்ட் என்றால் ஏரி அல்லது குளம். ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்கள்தான் இங்கு செல்ல உசிதமான காலம்.

கோவிந்தகாட்டில் சீக்கிய குருத்வாரா உள்ளது. இங்கே சாப்பாட்டு வசதியும் தங்கும் வசதியும் செய்து தருகிறார்கள். கங்காரியாவிலிருந்து ஹேமகுண்டம் செல்லும் பாதை கடினமானது என்பதால் யாத்ரிகர்கள் தண்ணீர், ஊன்றுகோல், குளிர் தாங்கக்கூடிய ஆடைகள் கொண்டு செல்வது அவசியம்.

குளிர் மிகவும் அதிகமாக இருக்கும் என்பதால், முதலுதவிப் பெட்டியும் வைத்துக் கொள்வது நலம். குளிர்ஜுரத்தைத் தடுக்கும் மருந்துகள், தலைவலி மாத்திரைகள் வைத்துக் கொள்வது அவசியம்.

ரண்தீர் பதிப்பகம்
ரெயில்வே ரோடு
ஆர்த்தி ஹோட்டல் பின்புறம்
ஹரித்துவார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்கும் வசதிகள்

ஹரித்துவார்

சப்தரிஷி ஆசிரமம் சிறுசிறு குடில்கள் கட்டி வைத்துள்ளது. தனியாருக்குச் சொந்தமான பல ஹோட்டல்களும், லாட்ஜ்களும் உள்ளன. தர்ம சாலைகளும் சத்திரங்களும் உண்டு. சாது பேலா ஆசிரமத்தில் அறைகள் வாடகைக்கு கிடைக்கின்றன. பரமார்த்த ஆசிரமத்திலும் தங்கும் வசதி உண்டு.

ரிஷிகேசம்

கைலாஷ் ஆசிரமத்தில் மருத்துவமனை, தங்கும் அறைகள், புத்தகக் கடைகள் உண்டு. சுவர்க்காசிரமம் என்னும் ஆசிரமத்திலும் நிறைய அறைகள் உள்ளன. ஆன்மீகப் புத்தகங்களை வெளியிடும் கீதா பிரஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான கீதாபவன் என்னும் இடத்தில் தங்கும் அறைகள் கிடைக்கும். கீதா பவனை ஒட்டி அமைந்திருக்கிறது பரமார்த்த நிகேதன். இந்த இடத்திலும் தங்குவதற்காக வசதியான அறைகள் அளிக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பத்ரிநாத்

பத்ரிநாத் கோயில் நிர்வாகத்துக்குச் சொந்தமான சத்திரங்கள் பல கட்டப்பட்டுள்ளன. பொதுப் பணித்துறையின் ஓய்வு இல்லம், தொழிலதிபர் பிர்லா வுக்குச் சொந்தமான தங்கும் விடுதி, சிறுசிறு தர்மசாலைகள் உள்ளன. வெவ்வேறு வாடகைகளில் பல ஹோட்டல்களும் உள்ளன.

கேதார்நாத்

தனியார் லாட்ஜ்கள், கோயில் நிர்வாகத்திற்குச் சொந்தமான சத்திரங்கள், தர்மசாலைகள், ஆசிரமங்கள், ஹோட்டல்கள் உள்ளன. பொதுப் பணித்துறையின் ஓய்வு இல்லமும் உள்ளது.

தேவபிரயாகை

உத்தராஞ்சல் மாநில அரசின் பயணிகள் விடுதி, பொதுப்பணித்துறை தங்கும் விடுதி உண்டு.

ஸ்ரீநகர்

உத்தராஞ்சல் மாநில அரசின் பயணிகள் விடுதி, காளி கம்ப்ளிவாலா தர்மசாலைக்குச் சொந்தமான தங்குமிடங்கள், பத்ரி-கேதார் நிர்வாகத்தின் தங்கும் விடுதி ஆகியவை உள்ளன.

ருத்ர பிரயாகை

உத்தராஞ்சல் மாநில வனத்துறையின் தங்கும் விடுதி, பொதுப்பணித்துறை பயணிகள் விடுதி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோயில் நிர்வாக தங்கும் விடுதி மற்றும் பல சத்திரங்கள் உள்ளன.

கர்ணபிரயாகை

உத்தராஞ்சல் மாநில வனத்துறை விடுதி, பொதுப் பணித்துறையின் ஓய்வு இல்லம், தனியார் லாட்ஜ்கள், தர்மசாலைகள் உள்ளன.

நந்த பிரயாகை

உத்தராஞ்சல் மாநில அரசின் பயணிகள் விடுதி, பொதுப்பணித்துறை ஓய்வு இல்லம், தர்மசாலைகள், சத்திரங்கள் உள்ளன.

பீபல்கோட்

கோயில் நிர்வாகத்துக்குச் சொந்தமான தங்கும் விடுதிகள், காளி கம்ப்ளிவாலா சத்திரங்கள், பொதுப்பணித்துறை ஓய்வு இல்லம் மற்றும் தர்ம சாலைகள் உள்ளன.

ஜோஷிமட்

தனியாருக்குச் சொந்தமான லாட்ஜ்கள், பிர்லா கெஸ்ட் ஹவுஸ், வனத்துறையின் ஓய்வு விடுதி, குருத்வாராவின் தங்கும் விடுதி, தர்மசத்திரங்கள், நந்ததேவி, காமெட் போன்ற தனியார் ஹோட்டல்கள் தங்கும் வசதியை அளிக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோவிந்த் காட்

குருத்வாராக்களும் தர்மசத்திரங்களும் உண்டு.

ஹனுமான்சட்டி

வனத்துறை ஓய்வு இல்லம், பொதுப்பணித்துறை தங்கும் விடுதி ஆகியவை உள்ளன.

குப்தகாசி

கோயில் நிர்வாகத்தினரின் யாத்ரிகர் விடுதி, பொதுப்பணித்துறை பயணிகள் விடுதி, தர்ம சத்திரங்கள் உள்ளன.

தெஹ்ரி

கௌரிகுண்டத்திலும் தெஹ்ரியிலும் கோயில் நிர்வாகத்தின் தங்கும் விடுதிகளும் பொதுப் பணித்துறை பயணிகள் இல்லமும் உள்ளன.

உத்ரகாசி

தனியார் லாட்ஜ்கள், வனத்துறை ஓய்வு இல்லம், பொதுப்பணித்துறை தங்கும் விடுதி, காளி கம்ப்ளி வாலா தர்சத்திரங்கள், கஷ்மீர் ஹோட்டல் போன்ற தனியார் ஹோட்டல்கள் உள்ளன.

ரண்தீர் பதிப்பகம்
ரெயில்வே ரோடு
ஆர்த்தி ஹோட்டல் பின்புறம்
ஹரித்துவார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்கு புண்ணியத் தல யாத்திரை புராணக் கதைகளின் மகிமை

பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி

❖BADRI ❖KEDAR ❖GANGOTRI ❖YAMNOTRI
YATRA GUIDE (Tamil Edition)

Randhir Book Shop
Railway Road, HARDWAR- 249401
Phone: (01334) 228510